# திராவிட இலக்கணக் கொள்கை

(கலந்துரையாடல்)

4047
Acc. no. 21932

பதிப்பாசிரியர்

வி. ஐ. சுப்பிரமணியம்

தமிழாக்கம்

வ. ஜெயதேவன்

பா. வீரப்பன்

# திராவிட இலக்கணக் கொள்கை

(கலந்துரையாடல்)

பதிப்பாசிரியர்

வி. ஐ. சுப்பிரமணியம்

தமிழாக்கம்

ஜெயதேவன்

பா. வீரப்பன்

அன்பு நூலகம்

சென்னை 600 005

அன்பு வெளியீடு 4

முதற் பதிப்பு 1978

உரிமை மொழிபெயர்ப்பாளர்க்கு

விலை ரூ. 3-00

*Dirāviḍa Ilakkaṇak Koḷkai (Kalanturaiyāḍal)*

'Debates on the Grammatical Theories in Dravidian'

Ed. V. I. Subramoniam (Professor and Head of the Dept. of Linguistics, University of Kerala)

Tamil Tr. V. Jayadevan & P. Veerappan (Dept. of Tamil, University of Madras)

**நூல் கிடைக்கும் இடங்கள்**

1 அன்பு நூலகம்
10 பார்த்தசாரதி சாமி தெரு சென்னை 600 005

2 தமிழ்ப் புத்தகாலயம்
58 துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு சென்னை 600 005

3 திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
79 பிரகாசம் சாலை சென்னை 600 001

4 பாரி நிலையம்
184 பிரகாசம் சாலை சென்னை 600 001

5 மீனாட்சி புத்தக நிலையம்
228 திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சென்னை 600 005
60 மேலக் கோபுரத் தெரு மதுரை 625 001

6 ஹிக்கின்பாதம் கம்பெனி
165 அண்ணா சாலை சென்னை 600 002

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | *Dirāviḍa Ilakkaṇak Koḷkai (Kalanturai-yāḍal)*<br>'Debates on the Grammatical Theories in Dravidian' |
| Language | Tamil (Translation from English) |
| Edition | First; May, 1978 |
| Editor | Dr. V. I. Subramoniam |
| Translators | V. Jayadevan & P. Veerappan |
| Copyright Holders | Translators |
| Paper used | SPB Cream Wove 16 k.g. |
| Size of the Book | 21.5×14 c.m. |
| Printing Types | 10 pt. |
| No. of pages | 48 |
| No. of copies printed | 1000 |
| Printers | Oppuravu Acchakam Madras - 600 018 |
| Binding | Art Board - Stiff Binding |
| Price | Rupees THREE |
| Publishers | Anbu Noolagam<br>10 Parthasarathy Samy Street<br>Madras 600 005 |
| Subject | Dravidian Comparative Grammar |
| Call Number | P3<br>31L8 |

# உள்ளுறை


| | |
|---|---|
| பதிப்பாசிரியர் முன்னுரை | 5 |
| மொழிபெயர்ப்பாளர் முன்னுரை | 7 |
| முதல் அரங்கம்<br>நூலடைவு | 9 |
| இரண்டாவது அரங்கம்<br>இலக்கணப் பொருளில் பொதுமை | 22 |
| மூன்றாவது அரங்கம்<br>திராவிட இலக்கணங்களில் சமசுகிருதம், பிராகிருதம், பாலி மொழிகளின் செல்வாக்கு | 30 |
| நான்காவது அரங்கம்<br>மொழியியல் நோக்கில் தொல் இலக்கணங்கள் | 39 |
| இணைப்பு | |
| I அறிவுரைக் குழுவின் பரிந்துரைகள் | 46 |
| II கலந்துரையாடலில் பங்கேற்ற அறிஞர்களின் முகவரி | 48 |


இந்நூல் மேற்குறித்த நிரலில் படித்தற்கு உரியது; குறிப்பு நோக்கீட்டுக் கருவி நூலாக இது கொள்ளுதற்குரியது அன்று. ஆதலின் சொல், பொருள் அடைவுகள் நூலில் இடம் பெறவில்லை.

வ. ஜெ.
பா. வீ.

# பதிப்பாசிரியர் முன்னுரை

திருவேங்கடவன் பல்கலைக்கழக (திருப்பதி) ஆட்சிக்குழு அறையில் 1972-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 26, 27 ஆகிய நாள்களில் 22 அறிஞர்கள் கூடி 'திராவிட மொழிகளின் இலக்கணக் கொள்கைப் பொதுமை' பற்றி ஆய்தற்குரிய நெறிமுறை குறித்துக் கலந்துரையாடினர். கலந்துரையாடல் நிகழ்ந்த நான்கு அரங்கங்களிலும் எழுத்துரையேதும் வழங்கப்பெற வில்லை: ஒவ்வோர் அரங்கத்திலும் ஒரு பொதுப்பொருள் முன் மொழியப்பட்டது. அறிஞர்கள் மனம் திறந்து தமது கருத்துகளை வெளியிட்டனர். எழுப்பப்பட்ட வினாக்கள் ஏராளம்; குறுக்கீடுகளும் ஏராளம். கலந்துரையாடலைத் தடைவிடைகள் உயிரோட்டமுடையதாக ஆக்கின. இருந்தபோதிலும் ஒவ்வொருவரின் கருத்துகளையும் மற்றவர் நன்கு அறிந்துகொண்டு பாராட்டும் பொதுச்சூழல் நிலவியது. கருத்துரைகளை உள்ளவாறே எழுதும் நேரிய முயற்சியில் சௌரிராசன் (வேங்கடவன் பல்கலைக்கழகம்), ஜி. கே. பணிக்கர் (கேரளா), க. ப. அருணாசலம் (சென்னை) ஆகியோர் ஈடுபட்டனர். இம்முயற்சியில் மூன்றுமவரே பெரிதும் வெற்றி பெற்றார். விடுபட்ட பகுதிகள் நினைவின் துணைக்கொண்டு நிறைவு செய்யப்பெற்றன. அறிவுரைக்குழுவின் துணையோடு ஒரு வாரத்திற்குள் பதிப்புப்பணி நிறைவுற்ற மூலப் படி எழுதப்பெற்றது. பின்னும் விடுபாடுகள் இருப்பின் அவற்றிற்குப் பதிப்பாசிரியரே பொறுப்பாவார்.

பேராசிரியர் ஜி. என் ரெட்டி, கே. சீவாசலு ஷெட்டி, பி. சி. நரசிம்ம ரெட்டி ஆகியோர் திருப்பதிக்கு வருகை புரிந்த அறிஞர்களுக்கு உரிய வசதிகளைச் செய்துதரும் பணியினை ஏற்றனர். பி. கோபிநாதன் நாயர், ஏ. பி. ஆண்ட்ரூஸ் குட்டி ஆகியோர் திருவனந்தபுரத்தில் உரிய ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டனர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி. ஜகந்நாத ரெட்டி திராவிட மொழியியல் கழகத் திட்டத்திற்கு முழு மனதுடன் தம் ஒத்துழைப்பை நல்கினார். மையத்தை நிறுவுவதற்கு ஒரு கட்டடமும், கட்டடம் அமைத்தற்கு நிலமும்

இவரால் அளிக்கப்பெற்றன. இவர்களனைவருக்கும் நமது மனமார்ந்த நன்றி உரியது.

கால்டுவெலின் மாபெரும் படைப்பான 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பம்' என்னும் நூலின் முகவுரையில் அவர் தெரிவித்த விருப்பமொன்றின் காலங்கடந்த நிறைவேற்றமே திராவிட மொழியியல் கழகத்தின் இத்திட்டமாகும்.

'தமது சொந்த மொழியினைப் பிறமொழிகளுடன் ஒப்பிடும் முயற்சியை அவர்கள் மேற்கொள்ளவில்லை; தமது மொழிசார்ந்த குடும்பத்தின் பிறமொழிகளுடன் கூட ஒப்பிட அவர்கள் முயற்சி செய்யவில்லை. இலக்கண ஆய்வின்பால் தாய்மொழிவாணர்கள் அளப்பரிய காதல் கொண்டதன் விளைவாக ஐரோப்பாவில் காணும் கற்றவர் உலகினும் முழுமையாக அறிந்து கொள்வதில் இவர்கள் பெரிதும் பின்தங்கி விட்டனர். இவர்கள் ஆழமான அறிவினைப் பெற்றுள்ளார்கள்; ஆனால் அகலமான அறிவினைப் பெறத் தவறி விட்டார்கள்' (பக். 10) என்று 1875இல் கால்டுவெல் கூறினார். திராவிட மொழியியல் கழகத்தின் பக்குவம் படைத்த மூதறிஞர்கள் இந்த இடைவெளியை விரைவில் சிறப்பாக நிறைவு செய்வார்களென நம்புகிறோம்.

**வி. ஐ. சுப்பிரமணியம்**
பதிப்பாசிரியர்
1-2-1973

# மொழி பெயர்ப்பாளர் முன்னுரை

**'திராவிட இலக்கணக் கொள்கை'** என்னும் இந்நூல், திராவிட மொழியியல் கழகத்தின் பதினோராவது வெளியீடாகிய **'Debates on the Grammatical Theories in Dravidian'** என்னும் ஆங்கில நூலின் தமிழாக்கமாகும்.

அறிஞர்கள் பலர் அமர்ந்து ஒரு பொருள் குறித்து விவாதிக்கவும் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் 'கலந்துரையாடல்' நல்ல கருவியாகும் என்பதனை நன்கு உணர்ந்த திராவிட மொழியியல் கழகம் 1972 அக்டோபர்த் திங்களில் அத்தகு முயற்சியில் இறங்கியது. இந்தச் சோதனை முயற்சியில் இந்தக் கழகம் எந்த அளவு வெற்றி கண்டுள்ளது என்னும் ஆராய்ச்சி ஆய்வாளர்களுக்கு உரியது; மொழிபெயர்ப்பாளர்களுக்குரியதன்று; ஆங்கிலத்தில் இந்நூல் இருந்தமையாலேயே போதிய அளவு இந்நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் ஆராய்ச்சியாளர் பார்வையில் படாமல் ஒதுங்கித் தொலைவில் நின்று கொண்டிருந்தன எனலாம். ஆகவே, இம் மொழி பெயர்ப்பு அவற்றைப் பரவலாக்கும் என நம்புகிறோம். 'இந்நூலில் உள்ள கருத்துகளுள் சில கொள்ளத் தக்கவை; சில தள்ளத்தக்கவை; சில மேலும் ஆராயத்தக்கவை' என்றெல்லாம் இனி ஆராய்ச்சியாளர்கள் ஆழமாக ஆராய இந்நூல் அடிப்படையாக அமையுமாயின் நாங்கள் மகிழ்வோம்; திராவிட இலக்கணக் கொள்கை குறித்த விரிவான நூல்கள் எழுமாயின் நாங்கள் பெரிதும் நிறைவு கொள்வோம்.

கலந்துரையாடலாக—அறிஞர்களின் கலந்துரையாடலாக—அதுவும் இலக்கணம் பற்றிய கலந்துரையாடலாகத் தமிழில் வெளிவரும் முதல் நூலாக இது அமையும் என்பதாலும், இந்த நூல் தாங்கியுள்ள கருத்துகள் தொடர்ந்து ஆராயத் துணை புரியும் என்பதாலும், இந்தத் துறை ஆராய்ச்சி இன்றியமையாதது என்பதாலும், தமிழறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடும் என்பதாலும், வெவ்வேறு பொருள் பற்றிய கலந்துரையாடலாகத் தமிழில் நூல்கள் பல வெளிவர இது வழி கோலும் என்பதாலும் இம் மொழிபெயர்ப்பு நூல் தோன்றியது.

இந்த நூலைத் தமிழாக்கி வெளியிட்டுக் கொள்ள இசைவும் உரிமையும் நல்கிய திராவிட மொழியியல் கழகத்திற்கு—சிறப்பாகப் பேராசிரியர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களுக்குக் கடப்பாடுடையோம்.

மூல நூலில் இடம்பெற்ற திராவிட மொழியியல் கழகம் அளித்த ஐந்தாவது திட்ட காலத்திற்குரிய திராவிட மொழியியல்

ஆய்வுத்திட்ட வரைவு இம்மொழி பெயர்ப்பு நூலில் இடம் பெறவில்லை. ஏனெனில் இது நூலின் தலைப்பிற்கு நேரடி உறவு பூண்டது அன்று.

அமைப்பு முறையில் மூல நூலும் இம்மொழிபெயர்ப்பு நூலும் மிகச் சில இடங்களில் சிறிது மாறுபடலாம். ஆனால் மூல நூலுக்குப் பொருள் முறையில் மொழிபெயர்ப்பு நூல் முழுக்க முழுக்க உண்மையாக உள்ளமை உறுதி. இவ்வாறு இம்மொழி பெயர்ப்பு அமைதற்குப் பெரிதும் துணை நின்றவர் டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) ஆவர். பல மணி நேரத்தைச் செலவிட்டு வரிவரியாகப் படித்துப் பார்த்துச் செம்மையான தமிழாக்கம் மலர உதவிய அன்னாருக்கு எம் நன்றி உரியது. இந்நூல் அச்சாகுங்கால் பல்லாற்றானும் துணைநின்ற நண்பர் திரு கோ. கிருட்டிணமூர்த்திக்கு நன்றியேம்.

இந்நூலை வெளியிட்டுக் கொள்ள இசைவளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எம் நன்றி உரியது.

சென்னை—600 005
19-5-1978

**வ. ஜெயதேவன்**
**பா. வீரப்பன்**

# திராவிட இலக்கணக் கொள்கை

(கலந்துரையாடல்)

**திராவிட மொழி இலக்கண மரபின் பொதுமையினைக் கண்டறிதற்குரிய நெறிமுறையினை வகுக்கக் கூட்டப்பட்ட அறிவுரைக் குழுக்கூட்ட நடவடிக்கைகள்**

திருவேங்கடவன் பல்கலைக் கழக ஆட்சிக்குழு அறையில் 1972ஆம் ஆண்டு அக்டோபர் 27, 28 ஆகிய நாள்களில் 22 அறிஞர்கள் நான்கு அரங்கங்களில் கூடிக் கலந்துரை யாடினர். முதல் அரங்கம் நூலடைவு பற்றியது. இரண்டா வது அரங்கம் இலக்கணப் பொருள் பொதுமை பற்றியது. மூன்றாவது அரங்கம் திராவிட இலக்கணங்களில் சமசுகிரு தம், பாலி, மற்றும் பிராகிருதத்தின் செல்வாக்கு பற்றியது. நான்காவது அரங்கம் தொல் இலக்கணங்களை மொழியியல் நோக்கில் விளக்குதல் பற்றியதாகும்.

முதல் அரங்கம்

# நூலடைவு

முதல் அரங்கிற்குத் திராவிட மொழியியல் கழகத்தின் இப்போதைய தலைவரான ஜி. ஜே. சோமயாஜி தலைமை தாங்கினார். இக்கழகச் செயலாளருள் ஒருவரான வி. ஐ. சுப்பிரமணியம் வருகை தந்த அறிஞர்களை வரவேற்றும் தென்னகத்தில் எல்லா முதன்மை மொழிகளின் சார்பிலும் கூடியுள்ள அறிஞர்களின் கூட்டத்தின் இன்றியமையாமையினை வலியுறுத்தியும் பேசினார். ஒப்பியல் நோக்கில் ஆய்வின் அகலத்தை மிகுதியாக்கிக் கொண்டு இலக்கணங்களை ஆராய்தல் மற்றும் திராவிட மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகராதியினைத் தொகுத்தல் ஆகியன குறித்த இராபர்ட் கால்டுவெலின் கருத்தினை அவர் நினைவு கூர்ந்தார். இவ்வகராதிப்பணி பரோ, எமினே ஆகியோரால் பத்தாண்டுகளுக்கு முன்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒப்பியல் நோக்கில் இலக்கண ஆய்வு நடப்பாண்டில் திராவிட மொழியியல் கழகம் அளிக்கும் இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வு மதிப்பு ஊதியத்தின் துணையால் நிறைவேற உள்ளது. பயிற்றுவித்தல், விளக்குதல் ஆகிய இரு முறைகளில் நாம் இப்போது கல்வித்துறையில் உள்ளவர்களுக்கும் மூத்த அறிஞர்களுக்கும் சிக்கல்களை எழுப்பி அவர்கள் தீர்வு காண்பதற்காகக் கூடியிருக்கிறோம். ஒரு தனித்த சிக்கலில் தீர்வு காண்பதற்காகப் பக்குவம் படைத்த அறிஞர்களைக் கூட்டும் இத்தகு முயற்சிகள் ஸ்டான்போர்டு, அமெரிக்கா மற்றும் கண்டத்து நாடுகளில் பயனளித்துள்ளன. இந்நாடுகளில் இத்தகு நோக்கங்களுக்காகப் பெரும்பெரும் குழுக்கள் கூட்டப் பெறும். திராவிட மொழியியல் கழகம் தொடங்கி வைத்துள்ள இந்தச் சோதனை முயற்சி - இந்தியாவிலேயே முதன்முறையாக மேற்கொள்ளப்பெறும் இம்முயற்சி-தொடர்ந்து நடைபெறும் என நம்புகிறோம். இதன் விளைவாகத் தெளிவற்ற அரைகுறையான விடைகளை மட்டுமே கொண்டுள்ள பெரும் பெரும் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காணுதல் இயலும் என நம்புகிறோம். தமிழ் மொழிக்காக இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வு மதிப்பூதியம்

வழங்குதற்கேதுவாக நிதி நல்கையளித்த தமிழக அரசிற்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். மலையாளம், கன்னடம் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் இத்தகைய மதிப்பூதியம் வழங்குதற்குத் துணையாக நிதி நல்கையளிக்க ஏனைய அரசுகளும் விரைவில் முன்வரும் என நம்புகிறோம்.

**ஜி. ஜே. சோமயாஜி (சோம.)** கூடியிருந்தோரை வரவேற்றுக் கூட்டத்தைத் தொடங்கினர்.

**தெ. பொ. மீனுட்சிசுந்தரன் (தெ.பொ. மீ.)** முதுநிலை ஆய்வாளனுக என்னை நியமனம் செய்தமைக்கும், இலக்கணத்தில் பொதுமை என்னும் திட்ட நிறைவேற்றம் தொடர்பாக என்பால் நம்பிக்கை கொண்டமைக்காகவும் திராவிட மொழியியல் கழகத்திற்கு நான் நன்றி பாராட்டுகிறேன். இலக்கணப் பொதுமை பற்றிய ஆய்வு பிறமொழி அறிஞர்களின் கூட்டுத்துணையோடு தான் நிறைவேற இயலும். இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையே நமது நோக்கமாகும். திராவிட மொழிகளுக்குள்ளேயும், திராவிட மொழிகள் மற்றும் இந்தோ ஆரிய மொழிகளுக்கிடையேயும் உள்ள ஒருமைப்பாட்டின் செல்வாக்கினை இலக்கணம் புலப்படுத்துகிறது. இத்துறையில் பயன் நல்கும் சில பொதுப் பொருள்கள்: (அ) திராவிட இலக்கணங்கள் பற்றிய சுருங்கிய வரலாறு, (ஆ) இலக்கணங்களில் ஆளப்பெற்ற கலைச் சொல்லடைவு, (இ) இலக்கண விதிகளின் விளக்கமும் அவை அமைந்த முறையும்.

திராவிட மொழிகளிலும் சமசுகிருதத்திலும் நாம் காணும் இலக்கணக் கோட்பாடு என்ன? வரருசியின் இலக்கணம் பற்றிய விளக்கமானது தமிழ், மலையாளம், கன்னடம், மற்றும் தெலுங்கில் காணப்படும் ஐந்திலக்கணங்களை (பஞ்ச லட்சணம்) உள்ளிட்டது அன்று.

ஒலியியல், ஒலிப்பட்டி (inventory), மற்றும் ஒலியன்களின் வகைப்பாடு, உருபன் மற்றும் தொகை முதலியவற்றைப் பாணினி விளக்குகிருர். எனினும் சமசுகிருத இலக்கணத்தை முழுமையாக அவர் விளக்கிவிடவில்லை.

பொதுமையைப் பற்றி நாம் ஆராயும்போது சந்திக் கொள்கைக்கு ஓரிடம் இருத்தல் வேண்டும். இலக்கணக் கொள்கைகளின் வரலாற்றில் மாற்றம் இருந்தாலும் சந்தி இலக்கண மாற்றமும் அதில் இடம்பெறல் வேண்டும்.

தென் இந்திய இலக்கணங்களில் உள்ள சொல் வகைகள் சமசுகிருதச் சொல் வகைகளை ஒத்துள்ளன; ஆனால், இதே சொல்

வகைப்பாடு அங்கும் இருக்கிறது எனக் கூற முடியாது. எழுவாய்-பயனிலை இயைபு, காரகம் முதலியவற்றின் கோட்பாடுகள் தமிழிலும் சமசுகிருதத்திலும் தம்முள் சிறிது மாறுபாடுடையன. தொல்காப்பிய உரியியலிற் சுட்டப்பெற்றுள்ள சொற்கள் மற்றும் அவற்றின் பொருள்கள் ஆராயப் பெறுதல் வேண்டும். நாம் எல்லாக் கருத்துரைகளையும் எல்லாச் சான்றுகளையும் கருதுதல் வேண்டும். மனநிறைவளிக்கிற ஒரு பணியினைச் செய்வதற்கு உங்களுடைய உதவியை எதிர்நோக்கியுள்ளோம்.

**வ. சுப. மாணிக்கம் (வ. சுப. மா.)** இந்தச் சிக்கலில் திருந்திய மற்றும் திருந்தா மொழிகளின் இலக்கணங்களை நாம் ஆய்விற்குக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு மொழியின் தனிச்சிறப்புகளையும் எல்லா மொழிக்கும் உள்ள பொதுமையினையும் நாம் கருதல் வேண்டும்.

**சோம.** 1946இல் வெளியான தெலுங்கு மொழி வரலாறு பற்றிய எனது நூல் தெலுங்கு மொழி மீது சமசுகிருதம், தமிழ் ஆகிய மொழிகள் செலுத்திய செல்வாக்கினை எடுத்துரைக்கிறது.

**வ. சுப. மா.** ஒரு மாநில மொழியில் உள்ள நூல்களை இன்னொரு மாநில மொழியில் அல்லது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து திராவிட மொழியியல் கழகம் வெளியிடலாம்.

**சோம.** தமிழில் உள்ள அன்மொழித்தொகை தெலுங்கில் பகுவிரீகியாக (bahuvrihi) வழங்கப் பெறுகிறது. (அவர் எடுத்துக்காட்டுகளைத் தந்தார்).

**விஜய வேணுகோபால் (வி. வே.)** இந்தக் கூட்டுச்சொல் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் இலக்கணமாகிய வீரசோழியத்தில 'பலமொல் சமாசம்' என வழங்கப்படுகிறது.

**சோம.** தொல்காப்பியம் பெரிதும் நிருத்தத்தினைப் (Nirukta) பின்பற்றியுள்ளது. திராவிட மொழிகளின் ஏனைய இலக்கணங்கள் பாணினியத்தைப் பின்பற்றியுள்ளன.

**வி. வே.** தொல்காப்பியம் மற்றும் ஏனைய இலக்கண உரைகளில் அக்காலத்து நடைமுறையிலிருந்த தத்துவக் கோட்பாடுகள் மற்றும் சித்தாந்தக் கோட்பாடுகள் பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. நியாய சாத்திரம் பெரிதும் பின்பற்றப்பட்டுள்ளது; மேற்கோளும் காட்டப் பெற்றுள்ளது. அணு, உதானம் ஆகிய சைன வழக்குகள் சைவ சித்தாந்திகளால் வேறு வழியாக விளக்கப்பெற்று வருகின்றன.

**தெ. பொ. மீ.** பாணினி ஒலிகளை அச் என்றும் ஹல் என்றும் பகுக்கிறார். ஐந்திரப் பாகுபாடு நிருத்தத்தினைப் பின்பற்றியுள்ளதா? பாணினியத்தைப் பின்பற்றியுள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. நியாய, வைசேடிக, மீமாம்சக, சப்த பிரமாணம் தொடர்பான விளக்கம் ஆகியவை இந்தத் திட்டத்தில் முழுமையாக ஆராயப்பட வேண்டுமாயின் பணி நீளும்; அவை எல்லா இலக்கணங்களுக்கும் பொதுவாக இருப்பின் பொருத்தமான கருத்துகளை விரிவாகச் சுட்டலாம்.

தகமிமிக்கு (Tagmemics), மாற்றிலக்கணம் போன்ற புதிய கொள்கைகளுக்கிணையான கருத்துகள் தொல் இலக்கணங்களில் உள்ளன. முடிந்த இடங்களில் இவற்றையெல்லாம் நாம் சுட்டலாம்.

**மு. கோவிந்தசாமி (மு. கோ.)** தொல் இலக்கணங்களின் கால நிரல் ஒன்றை நாம் தயாரித்தல் வேண்டும். ஏனெனில், கிறித்தவ ஊழியின் தொடக்க காலத்தைச் சார்ந்த தொல்காப்பியத்தை 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த லீலாதிலகத்துடன் ஒப்பிடல் கூடாது. லீலாதிலகத்தை நன்னூலோடு மட்டுமே ஒப்பிட முடியும். ஒவ்வோரிலக்கணத்திலும் ஆளப்பெற்றுள்ள கலைச் சொற்கள் மிகவும் கவனத்துடன் ஆராயப் பெறுதல் வேண்டும். ஏனெனில், அவை மொழிக்கு மொழி மாறுபடும்.

**இராதாகிருட்டிணன் (இரா. கி.)** நீங்கள் மொழியிலறிஞர்களையும் இலக்கணப் புலவர்களையும் வேறுபடுத்துகிறீர்களா? எல்லாத் திராவிட மொழிகளிலும் பொதுப் பண்புகள் சில மிளிரக் காண்கிறோம்.

**மு. கோ.** கலைச் சொற்களின் விளக்கமான பட்டியல் இன்றியமையாததாகும்.

**எஸ். வேங்கடசுப்பிரமணிய அய்யர் (வே. சு.)** பாகுவிரீகியும் அன்மொழித்தொகையும் என்னைப் பொறுத்தவரை ஒன்றல்ல. சமசுகிருதத்தில் 'பீதாம்பரம்' என்பது மஞ்சள் ஆடையினையும் அதனை அணிந்தவரையும் குறிப்பதாகும். ஆனால், தமிழில் இது அன்மொழித்தொகையாக இருக்க வேண்டுமெனும் கட்டாயமில்லை. நியாய, வைசேடிகக் கோட்பாடுகள் இலக்கணங்களில் ஓரளவு செல்வாக்கினைப் பெற்றுள்ளன.

**வி. வே.** விண்வெளியின் ஒரு பகுதியான வாயு தான் ஒலியின் தோற்றுவாய் எனலாம். இந்தக் கொள்கையானது ஒலி பற்றிய சைனர் கொள்கையோடு ஒப்பிடப் பெறுதல் வேண்டும். மேலும், 'முயற்கோடு' போன்ற இல்பொருள்கள் சொற்றொடர் அமைப்

பில் பொருத்தப் பெறுகின்றன. அன்றியும், மேற்கோளாகவும் ஆளப் பெறுகின்றன. சாம்சுகியின் கருத்துப்படி, இவை அமைப்பு முறையில் சரியாக இருப்பினும் பொருள் முறையில் பிழை யானவை.

**தெ. பொ. மீ.** தத்துவப் பொருள்களை உரையாசிரியர்கள் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது உரைகளில் சைன வேதாந்தக் கொள்கைகள் எதிரொலிக்கின்றன.

**சோம.** இத்தத்துவக் கொள்கைகளைக் கண்டறிதலும் இன்றி யமையாதது.

**இரா. கி.** மொழியின் இலக்கணத்தில் எந்த அளவில் இந்தத் தத்துவக் கொள்கைகள் செல்வாக்கு கொண்டிருக்கின்றனவோ அந்த அளவு இத் தத்துவங்களைத் தெரிந்து கொண்டு கொள் கையை விளக்க வேண்டும்.

**வி. வே.** மிகுதியான செல்வாக்கை உண்டாக்கியுள்ள அளவையியல், மற்றும் மெய்ப் பொருளியலை அறியாமல் எவ்வாறு இலக்கணங்களை ஒப்பிடுவது?

**டாக்டர் இராமச்சந்திரன் (இரா. ச.)** மிகுதியாகவா? எந்த வகையில்?

**வி. வே.** தொல்காப்பியர் சொல்கிறார் (எஞ்சிய பேச்சு காதில் விழவில்லை).

**சோம.** தத்துவ எண்ணங்களை அவற்றின் எல்லா விளைந்த கிளைகளோடும் நாம் ஆராய்தல் முடியாது.

**வி. வே.** தொல்காப்பியர் தமது இலக்கணத்தைக் குறிப்பாகச் செய்யுள் மொழிக்காகவே படைத்தார். ஒலி பற்றிய முதலதி காரம், சொற்கள் பற்றிய இரண்டாவது அதிகாரம் ஆகியவை செய்யுள் விளக்கத்திற்காக உரியவையாகும்.

**வ.சுப. மா.** முதலிரண்டு அதிகாரங்களிலும் தத்துவச் செல் வாக்கு இல்லை.

**சோம.** தொல்காப்பியர் மூன்று பால்களைக் குறிக்கிறார். தெலுங்கு இரண்டு பால்களைக் கொண்டுள்ளது. சமசுகிருதம் நன்கு தெரிந்திருந்தும் கூட இவற்றில் தெலுங்கு இலக்கணப் புலவர் சமசுகிருத இலக்கணப் புலவர்களைப் பின்பற்றவில்லை.

**வ. சுப. மா.** நாம் சில குறிப்பிட்ட கூறுகளில் மட்டுமே நமது கவனத்தை இப்போது செலுத்த வேண்டும். காட்டாக, நாம் கண்டறிய வேண்டிய எல்லையை விரிவுபடுத்திக் கொள்

வதற்கு மாறாக இப்போதைக்குத் திராவிட மொழிகளின் ஒலி இயல் என்னும் ஒன்று குறித்தே ஆராயலாம். அந்த நோக்கத்தில் இந்தக் கருத்தரங்கம் முடுக்கிவிடப்பட வேண்டும்.

**வி. ஐ. சுப்பிரமணியம் (வி. ஐ. சு.)** நாம் இங்கே ஓர் அறிவுரைக் குழுவில் கூடியிருக்கிறோமேயொழிய கட்டுரை படிக்கும் கருத்தரங்கத்தில் அல்ல; ஆண்டுக் கூட்டங்களிலோ அல்லது சில குறிப்பிட்ட கருத்தரங்கங்களிலோ இந்தப் பொருள் குறித்துக் கட்டுரை படிக்கலாம். இங்கு ஆராய்ச்சிச் சிக்கல் தொடர்பாக நம் கருத்துகளை மனம் திறந்து பரிமாறிக் கொள்ளவே விரும்புகிறோம். ஏனெனில், நம்மில் பலர் - ஏன்? நாம் அனைவருமே சிக்கலோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காட்டாக, கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தத்துவக் கருத்துகள், இவற்றின் பங்கு ஆகியவை சிறப்பாகப் பேசப் பெற்றன. விரிந்த இலக்கணப் பகுப்பாய்வோ, இலக்கணங்களின் ஒப்பீடோ நமது நோக்கமல்ல. இந்த நோக்கத்திற்காக வேறு கருத்தரங்கங்களை நாம் கொள்ளலாம். ஆகவே, தயவுசெய்து கருத்துரை வழங்குகையில் இயன்றவரை தீவிரமாகவும் உடனடியாகவும் வழங்குக. நாம் இப்போது எந்தச் சடங்குக்கும் கட்டுப்பட்டு நடக்கத் தேவையில்லை.

**மு. கோ.** மூன்று அல்லது நான்கு பொதுப் பொருள்கள் பற்றியே நாம் கலந்துரையாட வேண்டுமெனில் அவை யாவை?

**வி. ஐ. சு.** அழைப்பிதழில் குறிக்கப்பட்டவாறு இந்த அரங்கம் நூலடைவு குறித்தும் அடுத்து வரும் அரங்கங்கள் இலக்கணக் கூறுகளில் பொதுமை, திராவிட இலக்கணங்களில் சமசுகிருதம், பிராகிருதம் மற்றும் பாலியின் செல்வாக்கு, தொல் இலக்கணங்களை மொழியியல் நோக்கில் விளக்குதல் ஆகியவை குறித்தும் ஆராயும்.

**வ. சுப. மா.** நாம் பொதுப்படையாகப் பேசாமல் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

**மு. கோ.** இந்தப் பொதுப் பொருள்கள் ஒரு சுருங்கிய கருத்துக் கோவையுடன் தட்டச்சு செய்யப்பெற்று முன்னரே அளிக்கப்பெறுமாயின் இவை குறித்து நாம் எண்ணவும், குறிப்புகள் தயாரிக்கவும் வசதியாக இருக்கும்.

**வி. ஐ. சு.** பிற்பகல் அரங்கத்தில் இது தொடர்பாக ஆவன செய்ய நாங்கள் முயற்சி செய்கிறோம்.

**தெ. பொ. மீ.** நாம் இப்போது நூலடைவைப் பற்றி ஒரு கருத்தினைக் கொள்வோம். இங்குச் சில நூல்கள் உள்ளன; சில, வேறு மையங்களில் உள்ளன.

**வ. சுப. மா.** திராவிட மொழியியல் கழகம் இந்நூலடைவினைத் தயாரிக்க வேண்டும். நாம் அதனை நுணித்து ஆய்ந்து ஒழுங்கு படுத்தலாம்.

**தெ. பொ. மீ.** எல்லா மொழிகளிலும் வெளிவந்த கட்டுரைகளுமா? அல்லது ஆங்கிலத்தில் மட்டும் வெளிவந்தவையா?

**வி. ஐ. சு.** ஏற்கெனவே கிடைக்கின்ற நூலடைவோடு தயாரிக்கப்படுகிற புதிய நூலடைவும் இருப்பின் நன்று. ஆனால், இலக்கண மரபின் பொதுமை குறித்ததாய் உள்ள அரிய மொழிக் கட்டுரைகளே நம் நோக்கத்தில் கொள்ள வேண்டியது. மலையாள மொழியில் லீலாதிலகத்தின் மறுவிளக்கப், எல். வி. ஆர். அவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், நச்சினார்க்கினியர் உரை போன்ற நூல்கள், தெ. பொ. மீ., வ. சுப. மா. ஆகியோரின் எம். ஓ. எல். ஆய்வேடுகள், மற்றும் துறைகளில் உள்ள இத்தகு ஆய்வேடுகள் நம் பொருளுக்குப் பொருத்தமானவையாகும்.

**இரா. கி.** உறுப்பினர்களுக்குப் போதுமான காலம் அளிக்கப் படுமாயின் அவர்கள் கற்றுவல்ல மொழிகள் தொடர்பான நூலடைவுகளைத் தயாரித்து அனுப்ப முடியும்.

**யாரோ ஒருவர்** இது இரட்டைப் பணியாக முடியாதா?

**இரா. கி.** ஒவ்வொரு மொழிக்கும் நூலடைவு தயாரிக்கும் பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைக்கலாம். ஒருமாத காலத்திற்குள் நூலடைவினைத் தயாரித்து முதுநிலை ஆய்வாளருக்கு அனுப்பச் செய்யலாம்.

**வ. சுப. மா.** எல். வி. ஆர். அவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் போன்ற சில அரிய நூல்களைத் திராவிட மொழியியல் கழகம் வெளியிடலாம்.

**(திருமதி) லீலாவதி (லீலா.)** ஐரோப்பியர்களாலும் மற்றும் மலையாள அறிஞர்களாலும் படைக்கப்பட்ட மலையாள இலக்கணங்களின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

**மோ. இசரயேல் (மோ. இ.)** ஆந்திரனோவ் ஒரு நூலடைவினைத் தயாரித்தார். ஓர் அமெரிக்க அறிஞரும் தயாரித்தார். ஏனையோரும் இத்துறையில் ஈடுபட்டனர்.

**வ. சுப. மா.** தமிழுக்கே உரியதாகத் தனிநாயக அடிகள் தயாரித்த நூலடைவும் இப்போது உள்ளது.

**வி. ஐ. சு.** இவற்றுள் பல இப்போது நம்மிடமுள்ள சிக்கலுக்கு எவ்வகையிலும் பொருந்தாதனவாகும்.

**கே. மகாதேவ சாத்திரி (மகா.)** பொருளுக்குப் பொருத்தமானதாகத் திராவிட மொழிகளில் உள்ள கட்டுரைகள் மற்றும் ஆய்வுரைகளின் கருத்துப் பிழிவினைத் தயாரித்தல் வேண்டும். சில நல்ல ஆய்வுரைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பெறல் வேண்டும். வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களின் சில ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம். திராவிட மொழிகளில் அல்லது ஆங்கிலத்தில் உள்ள ஒவ்வோர் ஆய்வுக் கட்டுரையிலும் உள்ள இன்றியமையாக் கருத்துகளின் சுருக்கத் தொகுப்பு அவசியமானது என்பது என் எண்ணம்.

**வ. சுப. மா.** அந்தந்த மொழிகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் மிகவும் பயனுள்ளவை.

**வே. சு.** மொழியியலின் இன்றைய போக்குகள் (The current trends in Linguistics)—தொகுதி ஐந்தில் திராவிட மொழிகள் பற்றிய ஒரு நல்ல நூலடைவு உள்ளது. ஜே. எப். ஸ்டான் மற்றும் ஏனையோர் தமது கட்டுரைகளுக்குப் பின்னிணைப்புகளாக எப்போதும் நூலடைவுகளைச் சேர்க்கின்றனர்.

**சோம.** இரண்டு வார காலத்திற்குள்ளாக ஒவ்வொரு மொழிக்கும் நூலடைவுகள் தயாரித்து அவற்றைப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களுக்கு அருள்கூர்ந்து அனுப்புக.

**தெ. பொ. மீ.** நூல்கள், கட்டுரைகள் மற்றும் ஆய்வேடுகள்.

**பி. வேலாயுதன் பிள்ளை (வே. பி.)** கேரள நூலகங்களில் தமிழ், மலையாள மொழிகளின் தொடர்பு குறித்த ஏராளமான கட்டுரைகள் உள்ளன.

**வே. சு.** ஒரு நூலடைவு தயாரிக்கும் பணியோடு எல். வி. ஆர். அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியினையும் மேற்கொள்ள வேண்டும்.

**வ. சுப. மா.** எல்லா அரிய நூல்களும் மறு வெளியீடு செய்யப் பெறுதல் வேண்டும்.

**வி. ஐ. சு.** இப்போது அச்சில் இல்லாத கால்டுவெலின் ஒப்பிலக்கணத்தை மறு வெளியீடு செய்ய ரூ. 50,000 தேவைப்படும். எல். வி. ஆரின் தொகுதிகளை வெளியிடவும் ஏறக்தாழ அந்த அளவு பணம் தேவைப்படும். கொள்கை அளவில் மறு வெளியீட்டுக் கருத்தினை நாம் ஏராளமாக ஏற்றுக் கொள்ளலாம். பொருள் மற்றும் ஆசிரியர் பங்குரிமை (Royalty) போன்ற சிக்கல்களை அருள்கூர்ந்து கருதுக.

**தெ. பொ. மீ.** நான் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலிருந்த போது எல். வி. ஆரின் கட்டுரைகளை வெளியிட வேண்டினேன். ஆனால் உரிமைகள் கிடைக்கவில்லை.

**வ. சுப. மா.** அடுத்து வரும் கருத்தரங்கங்களில் ஒவ்வொரு மொழியிலும் முதலாவதாகவும் காலத்தால் மூத்ததாகவும் உள்ள இலக்கணங்களை ஒப்பிட வேண்டும்.

**தெ. பொ. மீ.** இது ஒரு தொடக்கம்தான். இறுதி நட வடிக்கை அல்ல. ஒத்த தன்மைகள் மற்றும் சிறப்புத் தன்மைகளை நாம் கருதுதல் இன்றியமையாதது. இலக்கணக் கொள்கைகளின் பொதுமை என்பது பொதுவான கருத்துகளைக் கண்டறிதலாகும். இதுதான் இத்திட்டத்தின் நோக்கமுமாகும்.

**வி ஐ. சு.** பி. எஸ். சாத்திரியின் தமிழ், சமசுகிருத மொழி களுக்கிடையேயுள்ள இலக்கணக் கொள்கைகளின் வரலாறு, மகாராட்டிர அறிஞர் ஒருவரின் இந்தோ ஆரிய யாப்பியல் ஆய்வு (திராவிட யாப்பியலும் குறிக்கப்பெற்றுள்ளது) போன்ற நூல்கள் எவையேனும் அச்சில் கிடைக்கின்றனவா?

**வே. சு.** கால்டுவெலின் ஒப்பிலக்கணம் வரலாற்று முறையில் அமையாமல் பெரிதும் விளக்க முறையிலேயே அமைந்துள்ளது.

**சோம.** தெலுங்கு, மலையாளம், மற்றும் கன்னட இலக்கணங் களில் ஒரே மாதிரியான கலைச்சொற்கள் காணக் கிடக்கின்றன. (இவர் தமது நூலிலிருந்து சில பகுதிகளைப் படித்துக்காட்டி விளக்கினார்). தமிழ் மட்டும் தமிழ்க் கலைச்சொற்களையே (இவற் றுள் சில கடன் சொற்களாகவோ கடன் மொழி பெயர்ப்பாகவோ இருப்பினும்) ஏன் பயன்படுத்தியுள்ளது?

இவ்வாறே தெலுங்கு, சமசுகிருதத்தில் தொகைகளின் பெயர் கள் ஒன்ருக இருக்கத் தமிழில் இவை வேறுபடுகின்றன. இந்தத் துறை மிகவும் பரந்துபட்டதாக இருப்பதால் நம் ஆய்விற்கு ஒரு வரையறையை வைத்துக் கொள்ளுதல் மிகவும் இன்றியமை யாதது. ஏனெனில், விரைவில் ஆய்வு முடிவுகளை நாம் எழுத்தில் நிலைபெறச் செய்யலாம்.

**வ. சுப. மா.** தமிழ் தவிர ஏனைய திராவிட மொழிகளனைத் தும் இலக்கணக் கலைச்சொற்களை அமைப்பதில் சமசுகிருதத்தைப் பின்பற்றியுள்ளன என்று சொல்லலாமா?

**சோம.** கோட்பாடுகளும் கடன் பெறப்பட்டுள்ளனவா?

**வ. சுப. மா.** கலைச்சொற்கள் மட்டுமே கடன் பெறப்பட் டுள்ளன.

சோம. கலைச்சொற்கள் மட்டுமல்ல கருத்துகளும்தான். காட்டாக, திராவிட மொழிகள் சமசுகிருதத்திலிருந்தே எல்லா அணிகளையும் கடன் பெற்றுள்ளன.

வி. ஐ சு. ஒப்பியல் நோக்கில் நூல்கள் அல்லது கட்டுரைகள் அல்லது ஆய்வேடுகள் எவையேனும் உள்ளனவா?

இரா. ச. மலையாளத்தில் தி. கருணாகரன் என்பவரால் லீலா திலகமும் தமிழிலக்கணங்களும் ஒப்பீடு செய்யப் பெற்றுள்ளன.

வே. பி. இவ்வாய்வுக்கு முன்னரே இதே பொருளில் எல். வி. ஆர். எழுதிய ஆய்வுக் கட்டுரை நினைவிற் கொள்ளத்தக்கது.

வி. வே. நாயக்கர் காலத்தில் தெலுங்கின் தேசி யாப்பு, தமிழ்ச் செல்வாக்கினை உடையதாக இருந்தது.

சோம. தொல்காப்பியர் தம் மதிப்பீட்டில் சொல் வகைப் பாட்டினைத் தெளிவாக வரையறை செய்துள்ளார். தொடக்க காலத்தில் தெலுங்கு இலக்கணப் புலவர்கள் சொல் வகைப் பாட்டினைப் பற்றிப் பேசவில்லை. பிற்கால இலக்கணப் புலவர்கள் சமசுகிருதச் சொல் வகைப்பாட்டினை அப்படியே எடுத்தாண்டுள்ளனர்.

வி. ஐ சு. மீண்டும் நூலடைவு பற்றிய சிந்தனைக்கு வருவோம். 1965இல் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் கேரள, மைசூர் மற்றும் உசுமானியப் பல்கலைக் கழகங்களின் கூட்டுத் துணையோடு இலக்கணக் கொள்கைகள் குறித்த கருத்தரங்குத் தொடரினை நடத்தினார்கள்.

தெ. பொ. மீ. ஒவ்வொரு கருத்தரங்கிலும் வழங்கப்பட்ட ஒவ்வொரு கட்டுரையின் ஒவ்வொரு படியும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்றும் பெறப்பட்டுள்ளது.

வி. ஐ. சு. அனுமதியளிக்கப்படுமாயின் திராவிட மொழியியல் கழகம் இவற்றை வெளியிடலாம். இவை நீண்ட காலமாக வெளிவராமல் உள்ளன.

சோம. ஆம். ஏறத்தாழ எட்டாண்டுகளாகின்றன.

வி. ஐ. சு. தொல்கிரேக்க இலக்கணக் கொள்கைகள் பற்றிய இராபின்சு அவர்களின் நூலினை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு திராவிட இலக்கணக் கொள்கைகளை இன்னும் சிறந்த முறையில் ஆராயலாம்.

இரா. கி. இல்லிச் அவர்களின் நூலினையும் கூர்ந்து நோக்கலாம்.

**ஜி. என். ரெட்டி (ரெட்டி.)** அண்மையில் வெளிவந்த 'ஆந்திர வியாகரண விகாசமு' என்பதுதான் எனக்குக் கிடைக்கும் ஒரே நூலாகும்.

**வ. சுப. மா.** நம் ஆய்வை, பேச்சு மொழியின் அடிப்படையில் மேற்கொள்ளாமல், எழுத்து மொழிக்கு அமைந்த இலக்கண நூல்களின் அடிப்படையில் மேற்கொள்ளலாம் அல்லவா?

**தெ. பொ. மீ.** பேச்சுமொழியில் சில இலக்கண வகைக்கு உரிய எடுத்துக்காட்டுகள் கிடைக்குமாயின் இம்மொழியினையும் நம் ஆய்வுக்குக் கொள்ளலாம். புதிய கொள்கை விளக்கத்திற்கு உதவும் தொல் இலக்கணங்கள், இவற்றில் கிடைக்கும் உயரிய சிந்தனைகள் ஆகியவற்றின் வாயிலாக நான்கு மொழிகளிலும் பெறப்படும் இலக்கணக் கொள்கைகள் நம் ஆய்வில் இடம்பெறல் வேண்டும்.

**மு. கோ.** சிற்றிலக்கணங்களை நாம் சேர்த்துக் கொள்ளக் கூடாதா?

**தெ. பொ. மீ.** சேர்த்துக் கொள்ளவேண்டும். நமது பொருளுக் கேற்ற வகையில் இவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இலக்கண வரலாற்றை எழுத நாம் இப்போது முயற்சி செய்ய வில்லை.

**வ. சுப. மா.** நூற்றாண்டு வாரியாக ஒப்பாய்வு செய்ய இயலுமா?

**சோம.** காலத்தால் மூத்த பாணினியம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். தமிழ், தெலுங்கு முதலிய வற்றின் இலக்கணங்கள் பிற்பட்டவை. நூற்றாண்டு முறையில் நாம் ஆய்வைத் தொடருவோமாயின் மிகுந்த இடைவெளிகள் இருக்குமே.

**வ. சுப. மா.** ஐந்திலக்கணம் எல்லாவற்றையும் நாம் ஆய்வுக் குக்கொள்ளாமல் ஓரிரு பொருள்கள் பற்றி மட்டுமே ஆய்வை வரையறைப் படுத்திக் கொண்டாலென்ன?

**தெ. பொ. மீ.** ஐந்திலக்கணம் அனைத்தையும் ஆய்வதென்பது இப்போது இயலாததொன்று. மொழிகள், இலக்கணம் (உருபனி யல், தொடரியல்) இவற்றோடு மட்டுமே நம் ஆய்வின் எல்லை யினை வைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது.

**சோம.** எழுத்து, சொல், பொருள் என்னும் இலக்கணப் பாகுபாடு தமிழுக்கே உரியதாகும்.

**வே. சு.** உரிச்சொல் (வேரும் வேர் உருபனும்), இடைச்சொல், (அல்வேர் உருபன்) என்னும் பாகுபாடு சமசுகிருதப் பாகுபாட்டினின்றும் சிறிது வேறுபட்டதாகும்.

**தெ. பொ. மீ.** பெயரும் வினையும் முதன்மையானவை. ஏனையவை அவற்றிற்குத் துணையானவை.

**வ. சுப. மா.** உரி என்பது குறைப்பெயரும் குறை வினையுமாகும்.

**சோம.** ஆக்க விகுதியினையும் (derivtaive suffix) பெருக்க விகுதியினையும் (inflexional suffix) தமிழில் எவ்வாறு வேறுபடுத்துகிறீர்கள்?

**வ. சுப. மா.** தமிழிலக்கணக் கொள்கைகளையும், தமிழ் கடன் பெற்ற இலக்கணக் கொள்கைகளையும் பிரித்துக் கொள்ள வேண்டும். தொல்காப்பியம் பெயர் வினைகளுக்கே முதன்மை யளித்தது.

**சோம.** தமிழ் தவிர ஏனைய திராவிட மொழிகள் சமகிருதச் சூத்திர அமைப்பினைப் பின்பற்றியுள்ளன.

**வி. ஐ. சு.** இலக்கணக் கொள்கைப் பகுப்பாய்விற்காகப் பெரும்பான்மையான வினாக்களை பின்வருமாறு அமைத்துக் கொள்ளல் வேண்டும். நான்கு வகைப்பட்ட சொற்கள், எண் வகைப்பட்ட வேற்றுமைகள் தமிழுக்கு உரியவையா? அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ கடன் பெறப்பட்டவையா?

**இரா. ச.** 'நல்வரவு' எனத் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள 'ஸ்வாகதம்' என்னும் சொல் 'ஸ்வ' என்னும் முன்னொட்டினைக் கொண்டுள்ளதா? இல்லையா?

**சோம.** இது ஓர் உப சருக்கமாகும்.

**வே. சு.** இது ஆகதம் என்னும் வினையோடு தொடர்புடையது.

**சோம.** திராவிட மொழிகளின் பொதுமையினை மட்டுமே நாம் ஆராய்கிறோமில்லையா?

**வ. சுப. மா.** தொல் திராவிட நிலை வரை செல்லும் பொதுமையா?

**வி. ஐ. சு.** திராவிட மொழிகளின் முன் வரலாறு குறித்து நாம் இக்கூட்டத்தில் ஆராயத் தேவையில்லை. திராவிட மொழிகளுக்குள்ளேயே காணும் ஒப்புரவுச் செல்வாக்கு (mutual influence), பிற பொதுமைகள் ஆகியவற்றை மட்டுமே நாம் ஆராயவேண்டும்.

**மு. கோ.** பிறமொழி இலக்கணங்களை நோக்கத் தமிழ்மொழி இலக்கணங்கள் மிகவும் பழைமையானவை. பிற்பட்டவற்றிலின்றும் முற்பட்டவற்றை வேறுபடுத்திக் கொள்ள வேண்டாமா?

**வி. ஐ. சு.** வேறு மொழிகளில் இலக்கணங்கள் பிற்பட்ட காலங்களில் தோன்றியிருப்பினும், இலக்கணம் பற்றிய சிந்தனை அதற்கு முன் அவர்களுக்கு இல்லை என்று சொல்லமுடியாது.

**மு. கோ.** அப்படியாயின் இதன் வாயிலாகக் குழப்பம்தான் விளையும்.

**வி. ஐ. சு.** இந்த இந்தக் கொள்கை இந்த இந்தக் காலத்தைச் சார்ந்த இந்த இந்த இலக்கணத்தில் கூறப்படுகிறது என்று சொல்லலாம். இந்தக் கொள்கை அந்த நூலின் காலத்திற்கு முன்னதாக நிலவவில்லை என்று கூற இயலாது. நிலவியிருக்கலாம்; நிலவாமலும் இருந்திருக்கலாம். இலக்கணங்களில் கால வரையறை அந்த இலக்கணங்களில் காணப்படும் சில கோட்பாடுகளின் காலத்தை அறிய உதவி செய்யும். ஆனால், இந்தக் கோட்பாடுகள் அதற்கு முன்னர் நிலவவில்லை என மறுத்துவிட இயலாது.

**வ. சுப. மா.** திராவிடமொழி இலக்கணங்கள் பற்றிய ஒரு சுருங்கிய வரலாறு சேர்க்கப்படுதல் வேண்டும்.

**வி. ஐ. சு.** ஆம்! உறுதியாகச் சேர்த்தல் வேண்டும். இயலுமாயின் எல்லிசு, ஆர்டன், குண்டர்ட்டு போன்ற ஐரோப்பிய இலக்கணப் புலவர்களின் கொள்கைகளையும் நோக்கல் வேண்டும்.

முற்பகல் அரங்கமானது 27-10-1972 அன்று பிற்பகல் 12-10க்கு நிறைவுற்றது.

**இரண்டாவது அரங்கம்**

# இலக்கணப் பொருளில் பொதுமை

இரண்டாவது அரங்கத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வ. சுப. மாணிக்கம் தலைமை வகித்தார். ஒலியியல், மற்றும் இலக்கண வகைப்பாடுகளில் பொதுமை குறித்துக் கலந்துரையாடல் நிகழ்ந்தது. சந்தியிலும் தொகைகளிலும் காணப்படும் சொந்த இலக்கணக் கூறுகள், மற்றும் கடன் பெற்ற இலக்கணக் கூறுகள் பற்றி முதலரங்கத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தின்படி தட்டச்சு செய்யப்பெற்ற கருத்துக் கோவை வழங்கப்பட்டது.

**வ. சுப. மா.** நாம் கலந்துரையாடவிருக்கும் பொருளுக்கு இயைபுள்ள செய்தி என்று கருதுவதனைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தொல்காப்பியம் தனது முதல் நூற்பாவில் முதன்மை, மற்றும் சார்பொலிகள் பற்றிப் பேசுகிறது. ஒலிப்பு முறையானது இதழ் தொடங்கிக் கடையண்ணம் வரை அன்று. ஆனால் கடையண்ணம் தொடங்கி இதழ் வரை ஆகும். ஒலிகளை உயிர் (வாழ்வதற்குரிய உயிர்) என்றும், மெய் (உடம்பு) என்றும் பகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மெய் என்பது சில இடங்களில் ஒலி என்னும் பொருளுடையதாகும். நூன்மரபில் மெய்யொலிக் கொத்துகளும் மொழி மரபில் மொழி முதல் வரும் ஒலிகளும் பேசப்படுகின்றன. ஒலிக்கொத்துகள் பெரிதும் மாறுதலவை; ஒரு சொல்லுக்கு அவை மிகவும் இன்றியமையாதவை; எனவே, இவை நூன் மரபில் விளக்கப் பெறுகின்றன போலும். ஒலிப்பு ஒலி இயல், உயிர்களையும் மெய்களையும் பின்வரும் அடிப்படையில் வேறுபடுத்துகிறது. உயிரானது குரல் நெரிப்பு இன்றி ஒலிக்கப்படுகிறது. ஆனால் மெய், குரல் நெரிப்புடன் ஒலிப்புப் பெறுகிறது. தொல்காப்பியரும் இத்தகு கருத்துடையவராகத் தோன்றுகிறார். பெரும்பான்மையான இலக்கணக் கலைச்சொற்கள் தொல்காப்பியத்தில் காணக்கிடக்கின்றன. இவற்றை முழுமையாகத் தொகுத்துப் பட்டியல் செய்தல் வேண்டும்.

**வே. சு.** உடம்பு உயிர் ஒப்புமையும், உயிரின்றி மெய் ஒலிகள் செயல்படா என்னும் கருத்தும், நூற்பா முறையும் தமிழ், சமசுகிருதம் ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவானவை.

**வி. ஐ. சு.** மெய்யொலிக் கொத்துகள், மற்றும் அசையியல்பு பெற்ற மெய்யொலிகளை உயிர் இன்றியும் ஒலிக்கலாம்.

**தெ. பொ. மீ.** உயிரொலிகள், ஒலி அசைகளின் மையமாக (nucleus of the syllables) இருப்பதால் இங்கு இவை பொருத்தமுள்ளவனவாக உள்ளன.

**வ. சுப. மா.** மெய்யொலிகளைப் பிரிக்க 'ஒற்று' என்னும் கலைச்சொல் பயன்பட்டது ஏன்?

**வே. சு.** 'ஹல்' என்னும் சொல் 'ஒற்று' என்னும் சொல்லை ஒத்திருக்கிறது.

**சோம.** உயிர், மெய் முதலிய சமசுகிருதக் கலைச் சொற்களைத் தொல்காப்பியம் பயன்படுத்திக் கொண்டது.

**வி. ஐ. சு.** தெலுங்கிலும் கன்னடத்திலும் உயிர், மெய் என்னும் வழக்காறு உள்ளதா? மலையாளத் தொல் இலக்கணங்களிலும் உரைகளிலும் உயிர், மெய் ஆகியவை இருந்தமைக்கான குறிப்புகள் இருப்பினும் மலையாளத்தில் அச், ஹல் என்னும் சமசுகிருதக் கலைச்சொற்களே வழங்கப்படுகின்றன.

**சோம.** தமிழில் இருத்தல்போல ழ, ற என்னும் வளைநாத் தொடரொலி (retroflex continuent), ஆடொலி (trill) ஆகியவை கன்னடத்திலும் உள்ளன. இவை வரும் இடங்கள் பற்றிய விதிகள் குறிக்கப்பட்டுள்ளன.

**வி. வே.** 'ஆதிஸ்பரிசம்' (ādhisparsa) என்பது தமிழில் இதே பொருளில் வழங்கப் பெறவில்லை.

**சோம.** சமசுகிருதத்தில் இருந்து தொல்காப்பியம் கடன் பெற்றுள்ளது என்பதனைத் தெளிவாக 'ஒற்று' என்னும் சொல் காட்டுகிறது. தொல்காப்பியர் தற்சமத்தினும் தற்பவத்திற்கே முதன்மை அளித்ததாகத் தெரிகிறது. வேதம், நிருத்தம் முதலியவற்றை அவர் நன்கு படித்திருக்கக் கூடும். ஆனால் தம் சுய சிந்தனை வழி அவர் அவற்றைப் பயன்படுத்துகிறார். ஆனால் கன்னடம், தெலுங்கு ஆகியவை கண்மூடித்தனமாகச் சமசுகிருதத்தினைப் பின்பற்றியுள்ளன.

**மு. கோ.** கேம்பிரிட்சு வரலாற்றின்படி, பாணினியும் தொல்காப்பியரும் கி. மு. 3ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்தவர்கள். நாம் இந்தக் காலத்தை ஏற்றுக் கொள்வோமேயானால் எது

எதிலிருந்து கடன் பெற்றதென்பதனைச் சொல்லுதல் இயலாது. இரண்டு நூல்களிலும் ஒத்த கருத்துகள் காணப்படுகின்றன என்று மட்டுமே சொல்ல இயலும்.

**வே. சு.** பாணினியின் காலம் கி. மு. 6ஆம் நூற்றாண்டென்பது பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் பிராதி சாக்கியத்தைப் (Praatisaakyas) பின்பற்றினர்; பாணினியைப் பின்பற்றவில்லை.

**மு. கோ.** தொல்காப்பியப் பாயிரம் ஐந்திரத்தைக் குறிப்பிடுகிறது.

**வே. சு.** இது ஒரு நூலல்ல. இது ஒரு முறையாகும்.

**இரா. ச.** இளங்குளம் குஞ்சன் பிள்ளை என்பவர் தொல்காப்பியம் கி. பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென்கிறார்.

**வ. சுப. மா.** தொல்காப்பியர் தமது நூலில் ஏராளமான கலைச்சொற்களை ஆண்டுள்ளார்.

**ஓர் அறிஞர்** உயிர், மெய் ஆகியவை உருவகச் சொற்கள் (figurative terms); துல்லிய விளக்கத்தில் இச்சொற்களைப் பயன்படுத்தாமலிருப்பது நலம்.

**தெ. பொ. மீ.** கடன் வாங்குதல் என்பதனை நடுங்கத்தக்க ஒன்றாகக் கொள்ளத் தேவையில்லை; வாழும் மொழியில் கடன் வாங்கல் என்பது இயல்பானதாகும். 20ஆம் நூற்றாண்டு ஆங்கில மொழியைப் பாருங்கள். 20ஆம் நூற்றாண்டு ஆங்கிலக் கோட்பாடுகளைப் பாருங்கள். பதஞ்சலி இலக்கணக் கோட்பாடு தமிழ் இலக்கணப் புலவர்களின் கோட்பாடுகளுடன் ஒத்ததாக உள்ளது. கடன் வாங்குதற்காக நாம் நாணத் தேவையில்லை. பண்பாடு ஊடுபரவுதல் (cultural diffusion) என்பது ஓரியல்பான நிகழ்வு ஆகும்.

சமசுகிருதம் எளிய பண்பாட்டுக் கலமாக இருப்பதாலும் இறந்த மொழியாக இருப்பதாலும் இம்மொழி மீது ஓர் ஆர்வம் எல்லா அறிஞர்கட்கும் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையே சமசுகிருதக் கலைச்சொற்களை வேறுபாடின்றிப் பயன்படுத்தற்கு வழிகோலியதாகும்.

**மு. கோ.** கடன் வாங்குதல் குறித்து நாம் கவலைப்படவில்லை. ஆனால், இது மற்றவரிடமிருந்து பின்பற்றப்பட்டதா அல்லது கடன் பெறப்பட்டதா என்பதனை முதலில் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

**வே. சு.** கடன் பெறுதல் என்பது ஒரு கலைச்சொல் அல்லவா?

**வி. ஐ. சு.** ஆம்! கலைச்சொல்லே; கடன் மொழிபெயர்ப்பு (loan translation), கலப்பு (blend) முதலியவை போல இதுவும் ஒரு கலைச்சொல்லே. ஆனல் இது ஒரு கலைச்சொல் என்று சொல்வதனல் இங்கு இப்போது என்ன பயன் விளையப் போகிறது?

நம்முடைய தலைமைப் பொருளுக்கு வருவோம். நாம் குற்றிய லுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் பகுப்பினைக் கொண்டிருக்கிறோம். தெலுங்கும் கன்னடமும் இந்த ஒலிகளைக் கொண்டுள்ளனவா? மலையாளம் குற்றியலுகரத்தை ஏற்கிறது. ஏனையவற்றை ஏற்கவில்லை. லீலாதிலகத்தின் உரையாசிரியர் தமிழில் உள்ளதைப்போல 'அஃது' என்பதனைக் குறிக்கிறார்.

**சோம.** தொல்காப்பியர் ஆண்டுள்ள கலைச்சொற்கள் யாவும் தமிழ் மூலத்தைக் கொண்டனவே. பிற மொழிகள் சமசுகிருத வடிவங்களை அப்படியே பயன்படுத்தியுள்ளன.

**வி. ஐ. சு.** இரண்டு கலைச்சொற்கள் ஒன்றைப்போலவே மற்றொன்றும் விளங்குமாயின் சமசுகிருதமே எப்போதும் கடன் கொடுத்திருக்க வேண்டும் என்று கருதத் தேவையில்லை. நேர் மாறான முறையும் இருந்திருக்கலாம். அல்லது ஒரு மூன்றுவது மொழியிலிருந்து இந்த இரண்டு மொழிகளும் கடன் பெற்றிருக்கலாம். முன்னமேர எழுந்த சார்புநிலைக் கருத்துகளில் அகப்படாமல் நாம் இவற்றைப் புதுவதாகக் கொண்டு ஆராயலாம்.

**இரா. கி.** கடன் வாங்குதல் (word borrowing) என்னும் சொல்லுக்குப் பதிலாகச் சொல் பின்பற்றுதல் (word follower) அல்லது வேறு ஏதேனும் நடுநிலைக் கலைச்சொல்லை (neutral term) நாம் பயன்படுத்தலாம்.

**சோம.** தெலுங்கு மொழியில் கி. பி. 11ஆம் நூற்றாண்டிலிருந்து பிராகிருதம் மற்றும் பாலி மொழிகளின் செல்வாக்கு மிக்கு உள்ளது. பின்னர் இவை இருந்த இடத்தைச் சமசுகிருதம் பெற்றது. மாநில மொழிகள் ஊக்குவிக்கப்படவில்லை.

அகத்தியர், தொல்காப்பியரிடையே உள்ள தொடர்பு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இலக்கணங்களுக்கு அடிப்படையாக உள்ள இலக்கியங்கள், அகத்தியர் காலத்திலேயே இருந்தமை அவராலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்னும் இம்மரபு பிறராலும் பின்பற்றப் பட்டுள்ளது.

ஆந்திர நாட்டில் வடக்கு தொடங்கித் தெற்கு ஈறாக எவ்வளவு மிகுதியோ அவ்வளவு மிகுதியாகத் தெற்கு

தொடங்கி வடக்கு ஈறாகவும் மக்கள் குடியேற்றம் பரவியுள்ளது. இராசராசன், இராசேந்திரன் முதலாய சோழராட்சிக் காலத்தில் பார்ப்பனர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஆந்திராவுக்குச் சென்றனர். இவர்கள், தொடக்கத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளையும் பேசினர். பின்னர் இவர்கள் தெலுங்கு மட்டுமே பேசினர். நம் ஆய்வில் இச்சூழ்நிலையில் மக்கள் எந்தத் திசையில் குடியேறினார்கள் என்பது இன்றியமையாதது.

**வி ஐ சு.** நாம் கருதவேண்டிய ஒரு கருத்தைக் குறிப்பிட்ட மைக்காசுப் பேராசிரியர் சோமயாஜி அவர்களுக்கு நன்றி. தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் தொல் இலக்கண இலக்கியங்களில் பாலி, பிராகிருத மொழிகளின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. பாலியும் பிராகிருதமும் சமசுகிருதத்தால் ஒளி மங்கிய போது தெற்கில இவ்விரு மொழிகளும் இருந்த இடத்தினை அவற்றின் இன மொழியாகிய சமசுகிருதம் பெற்றது. இதனுடைய செல்வாக்கு தமிழ், மலையாள இலக்கண இலக்கியங்களில் மிகத் தொடங்கியது இந்தோ ஆரியச் செல்வாக்கு குறித்த எந்த ஆய்வும் சமசுகிருதத்தோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. சமசுகிருதத்திலிருந்து கடன் வாங்குதல் தொடர்பாகப் பாலி, பிராகிருத மொழி அறிவு குறைவாக இருக்கும் சூழலில் செய்யப் பெறும் எந்த முடிவும் தற்காலிகமானதாகவே இருக்கும். இந்த உணர்வு இன்றியமையாததாகும்.

**இரா. கி.** மலையாள இலக்கணத்தில் குற்றியலுகரம் உள்ளது.

**வ. சுப மா.** சந்தியில் குற்றியலுகரம் பற்றித் தொல்காப்பியத்தில் தனித்த ஓரியல் (புணரியல்) உள்ளது.

**வே. பி.** மலையாளத்தில் முற்றுகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக உள்ளது. வேலு, 'ஓ. வேலு' (முற்றுகரம்); வேலு 'இவன் வேலு' (குற்றியலுகரம்).

**மு. கோ.** அஃது+யாது = அஃகியாது. 'அது என்ன?' என்று வருதலைப்போலக் குற்றியலிகரம் உங்களிடத்து உள்ளதா?

**இரா. கி.** மொழி முதல் யகரத்தைக் கொண்ட மலையாளச் சொற்கள் இல்லை.

**வே. சு.** வேறு சூழலில் யகரத்தின் முன் இகரம் அமையும் நிலைகள் உள்ளனவா?

**வ. சுப. மா.** இல்லை.

**வி. ஐ. சு.** இயார், எம்மியாம் என்பன எப்படி வந்தன?

**மா. இளையபெருமாள் (மா. இ)** இயாழ், இயாது முதலியன பயின்று வருமிடங்களுக்கு முப்பது நாற்பது காட்டுகள் தரலாம்.

**மோ. இ.** மெய்க்குப் பின்னர் வகர உடம்படுமெய்யும் அமைகிறது. எடுத்துக்காட்டு, விணவத்துக்கொட்கும்.

**வி ஐ. சு.** பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். முதன்மை ஒலிகள் (12+18) 30, சார்பு ஒலிகள் 3 ஆகிய இவை ஒலிக்கொத்துகளோடு நான்கு மொழி இலக்கணங்களிலும் அமையும் முறையினை விவாதிக்க வேண்டும்.

நான்கு மொழிகளிலுமுள்ள சந்தி முறை (எல். வி. ஆரின் திராவிடச் சந்தி) விரிவானதாக இருப்பினும் பயனுள்ளதாக இருப்பதால் இதனையும் ஆராய்தல் வேண்டும். அடிமாறமுருபுகள் (stem alternants) சந்தி விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. காட்டாக, லீலாதிலகத்தில் ஏழ், எழு ஆகியவை வருகின்றன. இவ்வாறே தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ளதா?

**சோம.** தமிழில் உள்ளவாறு தெலுங்கிலும் சாரியை உள்ளது. ஏனைய மொழிகளிலும் இவ்வாறே இருக்கக்கூடும்.

**இரா. கி.** உயிரையும் மெய்யையும் குறிக்க ஒலியன் என்னும் சொல் அடிக்கடி ஆளப்படுதலைக் கேட்கிறேன். கலைச்சொல் ஆட்சி குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். புதியவொன்றைப் பழைய ஒன்றோடு நாம் குழப்பிக் கொள்ளுதல் கூடாது.

**மோ. இ.** திருந்தாத மொழிகளையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்தகு மொழிகளுள் சிலவற்றில் குயி (Kui) மொழியில் இருத்தல்போலச் சொற்கள் மெய்யெழுத்துகளில் முடிதல் இல்லை. குற்றியலிகரமும் மெய், யகரங்களுக்கிடையே இருக்கக் காணகரோம்.

**சோம.** எகர ஒகரங்கள் சமசுகிருதத்தில் இல்லை. இவற்றின் நெடில்களே உள்ளன. இவையும் இரட்டையுயிர்களாகவே (dipthongs) உள்ளன. இவ்விரட்டையுயிர்கள் தமிழிலோ பிற திராவிட மொழிகளிலோ இல்லை. ஐ, ஔ என்னும் இரட்டையுயிர்களே தமிழில் உள்ளன. இவையும் அருகியே வழங்கப்படுகின்றன. குறிப்பாக 'ஔ' என்பது தனித்தமிழ்ச் சொற்களிலேயே குறைவாகவே காணப்படுகிறது.

**வ. சுப. மா.** பழைய சந்திக் கோட்பாட்டினை இன்றைய மொழியியலார் உருபொலியனியல் என்பர். இதற்காகத் தொல்காப்பியர் ஆறு இயல்களை வகுத்துள்ளார். தொல்காப்பியர் கோட்

பாட்டின்படிச் சந்தியில் ஒலிபியல்கூறு, உருபனியல்கூறு சில இடங்களில் பொருளியல்கூறு ஆகியவை அடங்கியுள்ளன. வீர சோழியம், நன்னூல் முதலாய பிற்கால இலக்கணப் புலவர்கள் இம்முறையினைப் பின்பற்றவில்லை.

**தெ. பொ. மீ.** புளூம்பீல்டு மூவகைச் சந்தியினைக் குறிக்கின் றார்: 1. ஒலிச்சந்தி, 2 உருபனியல்சந்தி, 3. பொருட்சந்தி.

**இரா. ச.** 'புளிபமரம்' போன்ற சொற்களை விடுத்தும் ஒரு மொழியின் ஒலிபன் முறையினைப் பாதிக்கின்றவற்றை மட்டும் சந்தி என நாம் வரையறுக்கலாமா?

**வி. வே.** கூடாது. இதனை நான் மறுக்கிறேன்.

**தெ. பொ. மீ.** இத்தகு குறுகிய வரையறையினை புளூம்பீல்டு ஏற்கவில்லை.

**இரா. ச.** பூந்தோட்டம், புளிங்கறி இவற்றில் காணும் சந்தி யாது? கேரளப் பாணினியின் அணுகுமுறை, சில இடங்களில் அறிவியல் நெறி சார்ந்தும் சில இடங்களில சாராமலும் விளங்கு கிறது. அவர் இவற்றைத் தெரிநிலைப் பெயரெச்சத் தொடராக வும் குறிப்புப் பெயரெச்சத் தொடராகவும் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

**சோம.** சந்தியின் வகைப்பாடுகள், ஒரினமாதலாக இவற்றை விளக்குதல் ஆகியவையே நாம் இப்போது எண்ணத்தக்கவை. ஏனையவை அறிவியல் நெறி சாராதவையாகும் (unscientific).

**இரா. கி.** ஏன் அவை அறிவியல் நெறி சாராதன என்று கருதுகிறீர்கள்? இயலுமாயின் சொற்பொருட் சந்தியினை நாம் நன்கு விளக்கலாம். சமசுகிருதத்திலிருந்து கடன் பெறப் பெற்ற காட்டுகளின் வழி அல்லது வேறுபட்ட சமுதாய நிலைகளிலிருந்து பெறப்பட்ட காட்டுகள் வழி, சொல் அலலது உருபன் எல்லை யானது தெளிவாகத் தெரியாது. விளக்கத்தில நாம் பயன்படுத்த இருக்கும் கலைச்சொல் எது? இது இந்த முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இதற்கு நாம் முதன்மை தர வேண்டும்.

**வ. சுப. மா.** நாம் இக்காலக் கலைச்சொற்களைப் பயன்படுத்த லாம்.

**மா. இ.** இரண்டு உயிர்களுக்கிடையே உடம்படுமெய் இடம் பெறும் என்பது முழுமையான விதியன்று. தொலகாப்பியரே உயிரொலிக்கொத்துக்களோடு உடம்படுமெய்யையும் சுட்டுகிறார். பேச்சு மொழியில் உடம்படுமெய் இல்லை. எல்லாச் சந்தி விதி களையும் உளளவாறே பயன்படுத்துவது இல்லை. 'கல்கண்டு' என்பதே பேச்சு வடிவம்; 'கற்கண்டு' என்பது அலல.

**சோம.** கல்வெட்டுகளில் உடம்படுமெய் பயின்று வருவது மிகவும் குறைவு. வகர உடம்படுமெய் தெலுங்கில் ஏற்கப்படுவதில்லை. 'ங்' என்பதும் சந்தி உடம்படு மெய்யாகும்.

**மோ. இ.** உயிர்ச் சந்திக்கு உடம்படுமெய்யாக வரும் ஒற்றுகள் இவை எனத் தொல்காப்பியர் சுட்டவில்லை. நான் மூன்னரே மெய்க்குப் பின்னர் உடம்படுமெய் இருப்பதைச் சுட்டிக்காட்டினேன்.

**தெ. பொ. மீ.** ஆய்தச் சந்தி மாற்றத்தில் 'அஃகடிய', 'அக்கடிய' ஆகியவை வடிவிலும் பொருளிலும் வேறுபாடுடையவை. பொருளடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டும் சந்தி மாற்றம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

**வ. சுப. மா.** கலந்துரையாடல் முடியும் நேரத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே நாம் கால வரையறையைக் கடந்து விட்டோம். இந்தப் பயனுள்ள அரங்கத்திற்கு என்னைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்ட உங்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி. ஐ. சு.** இந்த அரங்கத்திற்குத் தலைமை தாங்கியமைக்காகப் பேராசிரியர் வ. சுப. மா. அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குழுவின் இசைவோடு நான் பின்வருவனவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்: கலைச் சொற்கள் பொருள் மயக்கமுடையனவாக இருத்தல் கூடாது. பழைய கலைச்சொற்களையே பயன்படுத்த வேண்டியிருப்பின் அவை நன்கு வரையறுக்கப் பெறுதல் வேண்டும். இக்காலைய மொழியியல் கொள்கைகளை விளக்குதற்குப் புதிய கலைச்சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. இக்கலைச் சொற்களை ஆளும்போதும் பொருள் மயக்கமற்ற நிலையில் அவற்றை ஆளவேண்டும். அறிக்கையின் இறுதியில் கலைச்சொல் அகராதி ஒன்றைச் சேர்த்தல் நலம். நாளை முற்பகல் 9.00 மணிக்கு இதே அறையில் கூடலாம்.

## மூன்றாவது அரங்கம்

# திராவிட இலக்கணங்களில் சமசுகிருதம், பிராகிருதம், பாலி மொழிகளின் செல்வாக்கு

*மூன்றாவது அரங்கம் பேராசிரியர் எஸ். வேங்கடசுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் கூடியது. இவ்வரங்கம் திராவிட இலக்கண மரபுகளின் மீது சமசுகிருதம், பிராகிருதம், மற்றும் பாலி மொழிகளின் செல்வாக்கு குறித்து ஆய்ந்தது.*

**வே. சு.** முதலில் இப்பொருளுக்குத் தொடர்புடைய நூல்களையும் கட்டுரைகளையும் பற்றிச் சொல்வேன். பி. எஸ். சுப்பிரமணிய சாத்திரி அவர்களின் ஆய்வேடு மற்றும் வெளியிடப்பெற்ற நூல்களுடன் பரோவின் சமசுகிருத மொழி, பி. எஸ். ஓ. ஏ. எஸ். ஸில் வெளிவந்த கட்டுரைகள், ஏ. மாஸ்டரின் இந்தோ ஆரியன் மற்றும் திராவிடம், பிலியோஸாவின் தமிழும் சமசுகிருதமும், பி. சி. கணேச சுந்தரம், மற்றும் எஸ். வைத்தியநாதனின் திராவிட மொழிகளில் இந்தோ ஆரியக் கடன்சொற்கள், பாலி மொழி அகராதி, அபப்ரம்ஷாவின் வரலாற்றிலக்கணமும் மற்ற நூல்களும் இப்பொருள் பற்றி ஆய்வதற்குப் பயன்படும்.

சமசுகிருதத்தின் செல்வாக்கு திராவிட மொழிகளின் இலக்கணங்களின் மீதிருந்ததைவிட இலக்கணப் புலவர்களின் மீது அதிகமாக இருந்திருக்கின்றது.

சூத்திர நடை சமசுகிருதத்திலிருந்து வந்ததாகும். தொல்காப்பியர் உள்ளிட்ட அனைத்து இலக்கணப் புலவர்களும் இந்த நடையினைப் பயன்படுத்தியுள்ளனர். தொல்காப்பியர் ஒலிப்புகளைப் (articulation of sounds) பற்றிக் கூறும்போதும் வேற்றுமை உருபுகளைக் (case suffixes) கணக்கிடும்போதும் சமசுகிருதக் கலைச்சொற்களையும் கோட்பாடுகளையும் பயன்படுத்துகிறார். வீரசோழியம் பாணினியத்தை அப்படியே பின்பற்றுகிறது. பிரயோகவிவே

களும் அவ்வாறே. இலக்கணத்திற்கு இலக்கியமே அடிப்படை என்னும் உண்மை சமசுகிருதத்தில் நன்கு உணரப்பட்டிருந்தது. பயன்பாடும் விதிகளும் சம மதிப்புடையன.

திராவிட மொழிகளிலும் சமசுகிருதத்திலும் உயிர்களையும் மெய்களையும் கணக்கிடும் முறை ஒரே மாதிரியாகவே உள்ளது. நன்னூலுக்குப் பின்னர் தலைகாட்டினாலும் தமிழில் அதற்குமுன் ஒலிப்பொலிகள் (sonants) இல்லை. இந்த ஒலிப்பொலிகள் இம்மொழிக்கே உரியனவா என்பதும் ஐயப்பாடே. வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மெய்யெழுத்துப் பகுப்பு முறை சமசுகிருதத்தைப் போன்றது. இடையினம் என்பது 'அந்தஸ்தா' (anthestha) என்பதன் மொழிபெயர்ப்பாகும். (அதாவது உயிர்களுக்கும் மெய்களுக்கும் இடைப்பட்ட ஒன்று). தமிழின் தனித்தன்மையான ஆய்தம் போலச் சமசுகிருதத்தில் இருப்பது 'ஜிஹ்வா மூலீயம்' (jihvaa muulya). மு. இராகவையங்காரின் ஒருவகையான குறைப்பு (reduction) எனும் விளக்கம் இங்குக் கருதத்தக்கதாகும்.

**தெ. பொ. மீ.** இரண்டும் ஒன்றல்ல. எட்டாம் நூற்றாண்டில் ஆய்தம் ஐகாரமாகவும் இகரமாகவும் உணரப் பெற்றிருக்கின்றது.

**வே. சு.** கமில் சுவலபிலின் கருத்துப்படி சமசுகிருதத்தின் ஏ, ஒ என்பன திராவிட மொழிகளின் இரட்டையுயிர் போன்றன அல்ல. தமிழின் அளபெடையும் சமசுகிருதத்தின் 'புலுதா' (pulutaa) வும் ஒன்றாகும்.

**வ. சுப. மா.** அளபெடை ஒருபோதும் ஒலியன் இல்லை.

**இரா. கி.** 'புலுதா' என்பது அளபெடையினின்றும் வேறு ஆகும்.

**சோம.** அளபெடை என்றால் என்ன?

**வ. சுப. மா.** மாத்திரை நீளலே அளபெடை.

**வே. சு.** சந்தி மாற்றங்களாகிய மெய் பிறிதாதல், குன்றல், திரிதல் என்பன சமசுகிருதத்தைப் போன்றே உள்ளன. தோன்றல் திராவிட மொழிகளுக்கே உள்ள தனித்தன்மையாகத் தோன்றுகிறது. சாரியையும் திராவிட மொழிகளுக்கே உரிமையுடையதாம். சந்தியில் அகச்சந்தி, புறச்சந்தி எனும் பாகுபாடு சமசுகிருதத்திலும் உண்டு. வேற்றுமை உருபுகளும் அவ்வாறே; சமசுகிருதத்தில இது விபக்தி (vibakthi) எனப்படும்.

**தெ. பொ. மீ.** சற்று மாற்றம் உள்ளது; அந்தச் சொல் மொழி பெயர்ப்பல்ல.

**வே. சு.** பெயர் வேற்றுமை, முதல், இரண்டு, மூன்று முதலிய பெயர்கள் திராவிட மொழிகளுக்கே உரிமையுடையன.

**சோம.** முன்னைய சமசுகிருதத்தில் இப் பெயர்கள் வேறு.

**வே சு.** வேற்றுமை, வினை, பண்பு எனும் தொகைகள் சமசுகிருதம், திராவிட மொழிகள் இரண்டிலும் பொதுவாக உள்ளன.

**வி வே.** எல்லாம் அப்படி இல்லை. இடைச்சொல் என்னும் வகை சமசுகிருதத்தில் காணப்படுவது போன்றதல்ல.

**வே. சு.** தொகை என்பது நீக்கலும் சேர்த்தலும் ஆம். சமசுகிருதத்தில் 'சமாசம்' என்பது அதே பொருளைக் குறிக்கும். காரகக் கோட்பாடு இந்தியாவின் கொடையாகும். சாம்சுகியின் புதையமைப்பு இதனுடன் ஏறத்தாழ ஒப்பவைத்து எண்ணத்தக்கது. புதிய கோட்பாடுகளுக்கும் பழைய மரபுக் கோட்பாடுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் ஆராயப் பெற வேண்டும். சமசுகிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்பதைக் குறிக்க உரையாசிரியர்கள் 'இயற்றப்படுவது' போன்ற கலைச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர். 'குறிப்பு வினை' எனும் வகையினை 'நாம கர்த்தா' என்பதனுடன் ஒப்பிடலாம். பி. எஸ். எஸ். சாத்திரியின் கருத்துப்படி, இவை இரண்டும் ஒன்றல்ல. இதைப் போன்றே தன்வினை, பிறவினைகளும் சமசுகிருதத்தினின்றும் வேறுகின்றன.

**தெ. பொ. மீ.** இந்த இரண்டு கோட்பாடுகளும் முற்றிலும் வேறானவை.

**வே. சு.** 'பெற்ற தாய்' போன்ற மரபுத் தொடர் 'பெறப்பட்ட தாய்' என அமையலாமா என அறிய விரும்புகிறேன்.

**மா. இ.** இவை பெயரெச்சத் தொடர்களாகும். இவற்றில் செய்வினை, செயப்பாட்டுவினை அமைய வாய்ப்பு உண்டு.

**வே. சு.** 'ஸ்ரீ' எனும் சொல் 'திரு' என்று அமைவதும் தமிழ் மாதங்களின் பெயர்களும் சமசுகிருதத்தின் மொழிபெயர்ப்பாகும். கடன் பெறுகையில் தற்சம, தற்பவ முறைகள் ஆழ்ந்து கருதப்பட வேண்டியனவாகும். திராவிட மூலத்தையுடைய சொற்கள் என நிறுவப்பட்டுச் சமசுகிருதத்தில் பயன்படுத்தப்பட்டனவாக ஏறத்தாழ 500 சொற்கள் காணப்படுகின்றன. சமசுகிருதச் சொற்கள் எனக் கருதப்படுகின்ற சொற்கள் பல உண்மையிலேயே சமசுகிருதமாக இருப்பதில்லை. காட்டாக, ஜேஸ்டன்

(அண்ணன்), சாவதனம், அவதி, முதலியவை வடமொழியி லிருந்து வேறுபட்ட பொருள்களை உடையனவாகும். எவ்வாறு இவை மாறுபட்டன? வளைநா ஒலிகள் திராவிடத்திலிருந்து தோன்றியவை என ஒரு காலத்தில் நம்பப்பட்டது. பரோவின் அண்மைக்காலக் கட்டுரையானது இவ்வொலிகள் இந்தோ இரானி யன் காலந்தொட்டே இருந்தனவாகக் கூறுகிறது. சொற்கடன் பெறுவதில் தற்பவம் என்பது வரையறுக்கப்பட்ட இருமொழிச் சூழலால் என்றும் தற்சமம் என்பது விரிவான பரந்த இரு மொழிச் சூழலால் என்றும் பி.எச். கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடு கிறார். வடிவம் கடன் பெறுவது என்பது அவருடைய கருத்துப் படி மிகவும் அருமைப்பாடு உடையது. ஆனால், கடன் பெற்ற இலக்கண வடிவங்களைப் பழங்காலத்திலிருந்தே நாம் காண் கிறோம்.

**சோம.** எல்லா இந்திய மொழிகளும் சமசுகிருத மொழியி லிருந்து கடன் வாங்கியுள்ளன அல்லது சமசுகிருதத்தின் செல் வாக்கிற்கு உள்ளாயிருக்கின்றன. சமசுகிருதத்தின் மஹத், ஆஹத் பாகுபாடு திராவிட மொழிகளில் பின்பற்றப்பட்டுள் ளது. இலக்கியம், இலக்கணம் இவற்றுள் முன்னதற்கே முதன்மை என்பது பொருத்தமான ஒன்றாகும். 'பிரயோக சரண வியாகரண' என்னும் கோட்பாடு திராவிடத்தில் நன்கு பின்பற் றப்பட்டுள்ளது. ஒலிப்பொலிகள் வரிவடிவில் காட்டப்படுவ தில்லை. ஆனால் ஒலிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

**வ. சுப. மா.** சாதாரண எளிய மக்கள், 'காந்தி' (Gandhi) யைக் 'காந்தி' (Kanti) என்று ஒலிக்கிறார்கள்.

**சோம.** குறுக்கங்கள் திராவிட மொழிகளுக்கு உரியவை.

**இரா. கி.** அனுஸ்வரத்திற்கு எமினோ ஒலியன் நிலையை அளித்துள்ளார்.

**வே. ச.** அனுஸ்வரத்திற்கா?

**வி. ஐ. சு.** நாம் இதுகாறும் பாணினியின் இலக்கணத்தையும் இதன் செல்வாக்கையும் கேள்விப்பட்டிருக்கிறோம். தொல்காப் பியத்தில் ஐந்திர முறை பற்றிய குறிப்பு வருகிறது. இதிலிருந்து இது பாணினியத்தின் அமைப்பிற்கு மாறானது என்பதும் தமிழையோ பிற இலக்கணங்களையோ இது செல்வாக்குக்கு உள்ளாக்கவில்லை என்பதும் தெளிவு. தெற்கில் பாணினி யத்தைச் சாராத கோட்பாடுகளும் திறனாய்வுகளும் மிகச் சாதாரணம். வடக்கில் உள்ள நிலை பற்றி எனக்குத் தெரியாது. பஞ்ச இலட்சணக் கோட்பாடு உறுதியாகப் பாணினியத்தைப் பின்

பற்றியது இல்லை. ஐந்திரத்தின்பால் படுமா அல்லது பிறிதா? என்பது பற்றி எனக்குத் தெரியாது. எனவே, கடன் சொல் பற்றிய ஆய்வென்பது நம் திட்டத்திற்கு அவ்வளவு நெருக்க மில்லாதது; இங்கு வெளிப்படுத்தப்படும் கருத்துகள் இலக்கணக் கொள்கைகளை விளக்குதற்குரிய வகையில் அமையவேண்டும்.

**வே. சு.** பர்னலின் புத்தகமும் காதந்தர மரபு இலக்கணப் புலவர்களின் கோட்பாடுகளும் ஐந்திரமரபு பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உரிய இரண்டு அடிப்படை ஆதாரங் களாகும்.

**வ. சுப. மா.** தொல்காப்பியப் பாயிரம் முதலில் முந்திய நூல் கள் குறித்தும் பின்னர் ஐந்திரம் பற்றியும் பேசுகிறது. சிலப்பதி காரத்தில் குறிக்கப்பட்டவாறு இது ஒரு மெய்ப்பொருளியலமைப் பெனலாம்.

**வி. ஐ. சு.** சிலப்பதிகார உரையில் இது ஓர் இலக்கண நூலெனத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**தெ. பொ. மீ.** கடன் பெறுதல் என்பது பாவமா? நான் அப்படிக் கருதவில்லை. இலக்கணக் கொள்கைகளில் யாரும் இதற்காக வெட்கப்படத் தேவையில்லை. 'ஆசிரகம்' என்பது 'ஆய்தம்' என்றாயிற்று எனும் கருத்தை நான் மறுக்கிறேன். ஆய்தம் என்பது நுணுக்கம்; உள்ளதன் குறுக்கம்.

சமசுகிருதம் உலகக் கருத்தை அல்லது அக்காலத்தில் நிலவிய உலக எண்ணத்தை எதிரொலிக்கிறது. நாமும் இப்போது அக் கருத்தின் செல்வாக்கிற்கு உள்ளாகி இருக்கிறோம். நாம் அமெரிக்க இலக்கணங்களைப் பின்பற்றவில்லையா?

தொல்காப்பியர் சமசுகிருதச் கலைச்சொற்களை மொழி பெயர்த்திருக்கத் தேவையில்லை. ஆனால், சமசுகிருதத்தைத் தழுவியிருக்கலாம். பிராகிருதத்திலிருந்து கடன்பெறும் நிலை இருந்திருக்குமானால் திராவிடச் சொற்களும் கடன்பெறப் பட்டிருக்கலாம். பிராகிருதத்தில் உள்ள ஆறும் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் பிராகிருதம் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக் கினைப் புலப்படுத்துகின்றன. சாரியை என்பது திராவிடமொழி யின் தனித்தன்மையினைக் காட்டும் ஒரு கூறாகும். செயப்பாட்டு வினை அமைப்பு சமசுகிருதத்திலிருந்து கடன் பெறப்பட்டதாகும். தொல்காப்பிய நூற்பாக்களுள் சிலவற்றிற்குத் தெளிவாகப் பொருள் விளங்கவில்லை. 'ழ' என்பது அண்பல் ஒலியா? அல்லது வளைநா ஒலியா? என்பதனை நம்மால் சொல்ல இயல வில்லை. ஐந்தாம் வேற்றுமையாகிய நீங்கல்பொருள் வேற்றுமை

எனும் தொடர் சமசுகிருதத்திலிருந்து கடன் பெறப்பட்டதாகும். மேலும் பல வேற்றுமைகளைத் திராவிடமொழிக்குச் சேர்க்கலாம். சமகிருதச் சட்டகம் மிகுதியான அளவுக்குத் தழுவிக் கொள்ளப் பட்டது. திராவிட இலக்கணங்கள் மற்றும் திராவிட மொழி களின்பால் சமசுகிருதத்தின் செல்வாக்கு ஆகியவை இரண்டும் இரு வேறுபட்ட கூறுகள் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

**வி. ஐ. சு.** நான் முன்னரே குறிப்பிட்டதைப் போலப் பழைய இலக்கணங்கள் பாணினியத்தைப் பின்பற்றவில்லை. தொல் காப்பிய உரையாசிரியராகிய தெய்வச்சிலையார் ஒருவரே பாணி னிக்கு நெருக்கமான ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றார். பாணினி பற்றிய அண்மைக்கால நூலில் டாக்டர் மிஸ்ரா என்பவர் பாணினிய முறை, சொல்லையும் சொற் பகுதிகளையும் பகுத்து ஆய்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். ஐந்திரமுறை சொற்களினி டையேயுள்ள உறவு குறித்துப் பகுத்து ஆய்கிறது. இது, ஏன் தொல்காப்பியம் சொற்களைப் பகுதி விகுதியெனப் பிரித்து ஆராயவில்லை என்பதைத் தெளிவாக்கும். ஆனால், மொழி ஈறு களைக் கொண்டே இலக்கணங்களை அமைக்கிறது. ஏறத்தாழ இதே அணுகுமுறை மலையாளம் மற்றும் கன்னடத்தின் பழைய இலக்கணங்களில் காணப்படுகிறது. இந்தோ ஆரிய மொழிகளின் ஏதேனும் ஒரு பழைய இலக்கணத்தில் பாணினி முறையைச் சாராத ஓர் அமைப்பு உண்டா என்பதனை அறிய விரும்புகிறேன். இன்னொரு சுவையான கருத்து — வையாபுரிப் பிள்ளையின் கருத்து — அதாவது, பாணினியின் முறை குறிக்கணக்கியல் முறையாக இருத்தலால் தொல்காப்பியர் இதனைப் பின்பற்ற வில்லை. எந்தவொரு இலக்கணத்தையும் நாம் விரும்பும் வகையில் வேறு ஒரு மரபுக்குரிய இலக்கணமாக மாற்றலாம். மனிதப் படைப்புகளுள் இலக்கண முறையே எளிதில் இன்னொரு மொழி கடன் பெறுதற்கு ஏற்றதாகும்.

**தெ. பொ. மீ.** தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்றாகிய பிர யோக விவேகம் (கி. பி. 17-ஆம் நூற்றாண்டு) பாணினியைக் குறிப்பிடுகின்றது; பின்பற்றுகின்றது. 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தெலுங்கு இலக்கணமும் பாணினியத்தைப் பின்பற்று கின்றது. பாணினியின் குறிக்கணக்கியல் விதிமுறையினை எந்த ஒரு மொழியிலும் அமைக்கலாம்.

**இரா. கி.** தெலுங்கில் பாணினியம் பின்பற்றப்படுகிறது. தெலுங்கு இலக்கணங்களில் 'சமிக்கியாஸ்' அவருடையது. காதந்தர மரபு என்பது சாதவாகனக் காலத்தைச் சார்ந்ததும் பாணினிக்கும் பிற்பட்ட மரபினதுமாகும்.

**இரா. ச.** லீலா திலகம் பாணினியத்தின் செல்வாக்குக்குட்பட்டதாகும். கேரளப் பாணினியம் என்பது கண்மூடித்தனமாகப் பாணினியத்தைப் பின்பற்றியது. சமசுகிருதத்தின் மிகு செல்வாக்கு தெற்றெனப் புலனாகிறது. மலையாள நெடுங்கணக்கு முழுமையும் சமசுகிருதத்திலிருந்து கடன் பெறப்பட்டதாகும். இறுதி அறிக்கை எழுதப்படுவதற்கு முன்னர் இத்தகு செல்வாக்குகள் தொகுக்கப் பெறவேண்டும்.

**வ. சுப. மா.** திராவிட மொழிகளுள் கிடைக்கின்ற இலக்கணங்கள் எல்லாவற்றுள்ளும் தொன்மையானது தொல்காப்பியமாகும். ஆகவே, பிற திராவிட மொழிகள் தொல்காப்பிய முறையைப் பின்பற்றியிருக்கலாம்.

**மு. கோ.** 'கடன்பெறுதல்' என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பின்பற்றுதல் எனும் சொல்லே பொருத்தமானதாகும். பாணினியச் சார்பு இல்லாத ஓர் இலக்கண மரபாக இருக்கலாம்.

**வே. சு.** லீலாதிலகம் பாணினியத்தைப் பின்பற்றியது. சூத்திர யாப்பு, கலைச்சொற்கள் ஆகியவை பாணினியத்திலிருந்து எடுக்கப்பட்டவை. பாணினியம் முழுமையாக லீலாதிலகத்தில் கடன் பெறப்பட்டுள்ளது என்று நாம் சொல்லமுடியாது.

**வ. சுப. மா.** தொல்காப்பியத்தில் ஒரே நூற்பா மாட்டேறாக ஆறேழு முறை பயின்று வந்துள்ளது. (பிற திராவிட மொழிகளில் இவ்வாறுள்ளதா?)

**இரா. ச.** பாணினியத்திலிருப்பது போல மலையாளத்தில் அகநோக்குச் சுட்டு (Cross reference) மிகவும் வரையறுக்கப்பட்ட முறையில் அமைந்துள்ளது.

**வே. சு.** பாணினியம் சாராத வழக்காறுகள் வட இந்தியாவில் புகழ் வாய்ந்தவை. லூயிரெனுவின் நூல்கள் இதனை அரண் செய்யும். காளிதாசர், பவபூதி போன்ற உயர்ந்த நிலையிலிருக்கும் கவிஞர்கள் இலக்கண விதிகளுக்குப் புறம்பான வழக்காறுகளைப் பயன்படுத்தியிருப்பினும் அவை ஏற்றுக்கொள்ளப் பெற்றன. பிறகு எளிய புலவர்களும் கூட இந்தப் பட்டியலில் இடம் பெற்றனர்.

**சோம.** சமசுகிருதத்தில் அடிக்கடி ஆளப்பெறும் வழக்காறுகள் பழங்காலத் தெலுங்கில் ஆளப்பெறுவதற்கு ஒருவகைத் தடை இருந்தது. பிற்காலத்தில் எந்தச் சமசுகிருதச் சொல்லும் தெலுங்கில் ஆளப் பெறலாம் என்னும் நிலை ஏற்பட்டது. இலக்கணப் புலவர்கள் சமசுகிருதச் சொற்களைப் பயன்படுத்தினார்கள்; அன்றியும் பிறர் பயன்படுத்தவும் அனுமதித்தனர்.

**வ. சுப. மா.** ஓர் உண்மையினை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமசுகிருதம் இந்தோ ஐரோப்பியக் குடும்பத்தைச் சார்ந்திருக்கிற நிலையில் இந்தியாவில் இது உருவாக்கியிருக்கிற இலக்கணக் கலைச்சொற்களை நோக்க திராவிட மொழிகள் உள்ளிட்ட கலப்பற்ற மொழிகளின் செல்வாக்கே இதற்குக் காரணம் எனலாம். இந்தியம் அல்லாதது இந்தோ ஐரோப்பியம். இந்தோ ஐரோப்பியம் அல்லாதது இந்தியம். கடன் பெறுதல் தொடர்பாக நாம் ஆராய்கையில் இக்கருத்தினைத் தெளிவாக மனத்தில் கொள்ளவேண்டும்.

**சோம.** நான் முழுமையாக உங்கள் கருத்தினை ஏற்கிறேன். திராவிட மொழிகள், சமசுகிருத மொழி இவற்றின் அமைப்பினை நாம் முதலில் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னரே திராவிட மொழிகளை இந்தோ ஐரோப்பிய மொழிகளோடு ஒப்பிட வேண்டும்.

**வி. ஐ. சு.** சமசுகிருத இலக்கண விதிகளில் வழக்காறுகளுக்குச் சிறப்புத் தருவது தொடர்பாக ஒரு முக்கிய கருத்தினை நாம் எண்ணுதல் வேண்டும். தொல்காப்பிய நூற்பாக்களை விளக்கப் பின்வரும் முறையினைப் பின்பற்றுதல் வேண்டும் என ஓர் உரையில் குறிக்கப்பட்டுள்ளது: 1. நூற்பாக்கள், 2. அதே இலக்கண நூலில் உள்ள வழக்காறு, 3. சமகால இலக்கியங்கள். எழுதப்படுகின்ற எல்லாமே சரியானவை என்று சொல்லிவிட முடியாது. எல்லாப் புலவர்களும் பின்பற்றத்தக்க சிறப்புக்குரியவர்களாக ஆகிவிடுவதில்லை. இலக்கண விதிகளுக்குப் புறம்பான வழக்காறுகள் இருப்பின் அவற்றின் நிலை என்ன?

**வே. பி.** இது ஒரு முக்கியமான கருத்து. மலையாள உரைநடையில் பல வழக்காறுகள் இலக்கணப் புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாதனவாக உள்ளன.

**வே. சு.** ரெனுவின் நூல் பாணினியம் சாராத வழக்காறுகளுக்குப் பல காட்டுகளைத் தந்துள்ளது.

**மு. கோ.** இதுவரை சமசுகிருதம், திராவிட மொழிகள் ஆகியவற்றின் செல்வாக்கு குறித்து மட்டுமே நாம் ஆராய்ந்தோம். முண்டா, பிராகிருதம், பாலி முதலிய மொழிகளின் செல்வாக்கு பற்றி ஆராய வாய்ப்புண்டா? திராவிட மொழிகளுக்கான ஒரு கைமேடு—வழிகாட்டும் நூல—மிகவும் இன்றியமையாததல்லவா? திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி விரிவுபடுத்தப்பட்டுத் திருத்தப்பட வேண்டும். வேர்ச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு நம் ஆய்வைத் தொடங்குதல் வேண்டும்.

**தெ. பொ. மீ.** அது நம் திட்டத்தின் பகுதி அல்ல.

**வே. சு.** இப்போது பன்னிரண்டு மணி. மனந்திறந்த உரையாடலுக்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**வி. ஐ. சு.** பிற்பகலில் தொல் இலக்கணங்களை மொழியியல் நோக்கில் விளக்குதல் பற்றிக் கலந்துரையாடலாம். எஸ். வேங்கட சுப்பிரமணிய அய்யர் இவ்வரங்கத்திற்குத் தலைமை வகித்தமைக்காகவும் கூட்ட நிகழ்ச்சிகளை நடத்தித் தந்தமைக்காகவும் நன்றி பாராட்டுகிறோம். உணவிற்குப் பின் 2.00 மணிக்குக் கூடுவோம்.

நான்காவது அரங்கம்

# மொழியியல் நோக்கில் தொல் இலக்கணங்கள்

மொழியியல் நோக்கில் தொல் இலக்கணங்களை விளக்குதல் பற்றிய இவ்வரங்கத்திற்குப் பேராசிரியர் ஜி. என். ரெட்டி தலைமை தாங்கினார்.

**ரெட்டி.** நம் அமைப்பில் இலக்கண ஆய்வு என்பது ஒரு பகுதியாகும். 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம் கொண்ட புதிய மொழியியல் நமது பேரிலக்கண மரபை மறுபடியும் கண்டறியப் பெரிதும் உதவியது. நம் இலக்கணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்கள், இலக்கண வகைகளின் நுட்பிய வகைப்பாடுகள் ஆகியவை இக்கால மொழியியலின் அடிப்படையில் புதிய நோக்கில் பகுப்பாய்வு செய்தற்குப் பெரிதும் தகுதி படைத்துள்ளன. தொல் இலக்கணங்கள் ஒலியியல், உருபனியல், தொடரியல் ஆகியவற்றை ஆழ்ந்து எண்ணியுள்ளன. மொழிப் பொருளியல் அகராதிகளில் இடம் பெற்றுள்ளன. தொல் இலக்கணங்களைப் புதிய நோக்கில் விளக்குதல் பற்றி நாம் ஆராய்கையில் எல்லா இலக்கணங்களின் உள் ஒருமைப்பாட்டினையும் நாம் கருதுதல் வேண்டும். இந்தப் பொருளினைக் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்வோம்.

**வி. ஐ. சு.** ஏனைய உறுப்பினர்கள் தங்களது எண்ணங்களை நினைவுகூர்ந்து கொண்டிருக்கும் இச்சூழ்நிலையை சில வினாக்கள் எழுப்புவதற்காக நான் பயன்படுத்திக் கொள்கிறேன். தொல் இலக்கணங்களை நாம் பார்க்கையில், முரணியம் (Contrast), நிரப்பியம் (Complementation) போன்ற அறிமுறைக் கருவிகள் பற்றி வெளிப்படையாக அல்லது இலைமறைகாயாகப் பேசப்பட்டுள்ளன. திராவிட மொழிகளில் ஒலியழுத்தம் (stress) உண்டா? இருப்பின் ஒலியன் தன்மையுடையதா? இது குறித்துத் தொல் இலக்கணங்கள் ஏதும் சொல்கின்றனவா? சந்தியில் வேற்றுமை

மற்றும் அல்வழிச் சந்தியினை இசைத்திரிபு (Juncture) என வழங்கலாம். முற்றிசைத் திரிபுகள் (Close Junctures) மெய் இரட்டிப்பினால் காட்டப்படும். இவை பெரிதும் வேற்றுமைச் சந்தியாகும். குறை இசைத்திரிபுகள் (Open Junctures) இரட்டிக்கா நிலையில் சுட்டப்பெறும். இவை பெரும்பாலும் அல்வழிச் சந்திகளாகும். இவற்றிற்கு விலக்குகள் உண்டு. எல்லா மீப் பகுப்பு ஒலியன்களையும் பகுப்பு ஒலியன்களாக மாற்றுவதற்கு இது பயன்படும். தொல்காப்பியத்தில் தொடக்க கால அணுகு முறையாகிய அகச் சொல்லுருவாக்கம் முதலாக உருபனியல், தொடரியல் முதலியவை என வளர்ந்துள்ள சொல்லுருவாக்க அமைப்பினை (அடி + இணைப்பு) உருபனியலில் நாம் காண்கின்றோம். தொடர்களில் உள்ள சொற்களை வகை பிரித்தாராயும் சொல் வகைப்பாடு, எழுவாய், பயனிலை இயைபு, தகுதி பற்றிய விதிகள், (rules of appropriateness) இலக்கணம், இலக்கணமில்லாதது, வழு ஆகியவை தொடர்பான சொல் பற்றியும் பொருள் பற்றியும் உள்ள எண்ணங்கள் ஆகியவற்றின் நிலையை நான்கு மொழிகளி லும் ஆராய வேண்டும். ஓரளவுக்குப் பிலமோரின் வேற்றுமைக் கோட்பாட்டுக்குப் பிறகு நன்கு அறிமுகமான காரகக் கோட்பாட் டினைத் திராவிட மொழி ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தலாம். பெயர்களைப் பயனிலையாகக் கொண்ட தொடர்களின் நிலை என்ன? மேலும், ஆறாம் வேற்றுமையைப் பொறுத்தவரையில் எத்தகைய வேற்றுமையுறவை அங்கே அமைக்க முடியும்? இந்த இடங்களில் செயற்கையாகச் சில அமைப்புகளை நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டுமா? தொல் இலக்கணங்களில் மாற்றிலக்கண வியலாரின் கோட்பாடோ வேறு மொழியியல் கொள்கையினரின் கோட் பாடோ இல்லாமற்போனால் அதனால் இழப்பு ஏதுமில்லை. விளக்கிக் கூறவேண்டிய குறிப்புகளைப் புறக்கணிப்பது எவ் வளவு ஊறுபாடு விளைக்குமோ அவ்வளவு ஊறுபாடுகளை வலிந்து இணைகளைக் காணும் முயற்சியும் விளைக்கும். இன்னும் ஒரு கருத்துடன் என் உரையினை முடித்துக் கொள்கிறேன். தொல் காப்பியர் எல்லா வேற்றுமைகளுக்கும் கொடுத்துள்ள பொருள் கூறுபாடுகள் ஆராயத்தக்கன. அவற்றுள் சில ஒன்றோடொன்று மயங்கிய நிலையில் உள்ளன. மேலும் ஒரு சில பொருள்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட வேற்றுமைகளுக்குரியனவாகக் காட்டப் பட்டுள்ளன. இவை தனித்த சிறப்புச் சட்டகங்களைச் சார்ந்த வையா? அல்லது பொருட்கூறுபாடுகளா? இவையும் ஆராயத் தக்கன.

வி. வே. தொல்காப்பியம் செய்யுள் மொழிக்கே உரியது. இதில் மெய்ப்பொருளியலின் செல்வாக்கும் உள்ளது. குறிப்பாக,

இவருடைய உருபனியல், தொடரியல் அடிப்படையினைக் கொண்டது. அன்மொழியானது எழுவாய்-பயனிலை இயைபுக்கு இணையானதாகும். பி. அருணாசலம் தமது பிஎச். டி. ஆய்வேட்டில் தமிழ்த் தொடரியலின் வரலாற்றினை விளக்கியுள்ளார்.

**வ. சுப. மா.** தொல்காப்பிய எச்ச இயல், தொடரியல் ஆய்விற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

**வி. வே.** பத்து எச்சங்கள் செய்யுளில் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று அல்லது இரண்டு - உறுதியாக இரண்டுக்கும் மேற்பட்டுப் பேச்சுத் தமிழில் காணப்படவில்லை.

**சோம.** தமிழில் சொல்லாக்க விகுதி (derivative suffix) உள்ளதா? தொழிற்பெயர், வினைப்பெயர் விகுதிகளை நாம் அறிவேன். ஒரு சொற்றொடரில் செயல் மிகவும் இன்றியமையாதது. செயப்பாட்டு அமைப்புகள் சமசுகிருதச் செல்வாக்கினால் ஏற்பட்டவையாகும்.

**மோ. இ.** தொல்காப்பியக் கிளவியாக்கத்தில் 'படு' எனும் செயப்பாட்டு இடைச்சொல் இடம் பெற்றுள்ளது.

**வி. ஐ. சு.** இலக்கணத்தில் பயன்படும் சில கோட்பாடுகளை நாம் வரையறை செய்து கொள்வது தேவையானது. தமிழில் உள்ளதைப்போல வேறு எந்த இலக்கணத்திலாவது அகராதி உள்ளதா?

**வி. வே.** உரிச்சொல் செய்யுளுக்கு மட்டுமே உரியது.

**வ. சுப. மா.** உரிச்சொல்லைச் செய்யுளுக்கு மட்டுமே உரியதாகக் கொள்ள முடியாது.

**வி. ஐ. சு.** 'ஒட்டகம்' என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. இச்சொல சங்க இலக்கியம் முழுவதிலும் ஓரிடத்தில் மட்டுமே பயின்று வருகிறது.

**வி. வே.** சொற்கள் அமையும் வரிசை முறை, இயைபு, பொருள் தகுதி ஆகியவை குறித்துத் தொல்காப்பியம் பேசுகிறது. இதில் காணப்படும் அமைப்புமுறை மிகத் தெளிவானது. இவற்றுள் பெரும்பான்மை செய்யுளுக்கே உரியவை.

**மு. கோ.** 'கடுமை', 'கடு' ஆகியன பேச்சு வழக்கில் உள்ளன. இத்தகு சொல் விதிகள் பிற மொழிகளில் உள்ளனவா?

**இரா. கி.** தெலுங்கில அவை உள்ளன. ஆனால், அவை சமசுகிருதத்திலிருந்து கடன் பெற்ற சொற்களுக்கு மட்டுமே உரியவையாகும்.

**வே. சு.** 'கனம்' மற்றும் 'தாது' ('பாதம்') இலக்கணத்தின் அங்கமாகக் கருதப்படலாம். இவை பெரும்பான்மையும் சொல் பற்றியனவேயாகும்.

**இரா. ச.** மலையாள இலக்கணத்தில் சொல் விதிகள் (lexical rules) இல்லை. ஆனால், இவை நிகண்டுகள் அல்லது அகராதிகள் போன்ற பிற நூல்களில் உள்ளன.

**மோ. இ.** தொல்காப்பியர் உரியியலில் தம் காலத்து வழக்கில் இல்லாத சொற்களை மட்டுமே பட்டியல் செய்து அவற்றிற்குப் பொருள் விளக்கம் தருகிறார்.

**வி. ஐ. சு.** உரியியலில் காணப்படும் சொற்கள் தொல்காப்பியத்திலேயே ஆளப்படவில்லையா?

**வி. வே.** எழுவாய், பயனிலை இயைபு அல்வழி இயைபாகச் சுட்டப்பட்டது. எனவே இரட்டிப்பில்லாச் சந்தியாகிறது. வேறு சொற்களில் சொல்ல வேண்டுமானால் இஃது ஓர் இடைவெளி (pause) ஆகும்.

**வி. ஐ. சு.** இது சுவையாக உள்ளது. அருணாசலம் குறிப்பிட்டுள்ளவாறு இதனை ஓர் ஒலி இடைவெளி என்று நீங்கள் சொல்வீர்களேயானால், எழுவாய், பயனிலை இவற்றின் முறையை நீங்கள் மாற்றலாம். பின் எந்த ஒலி இடைவெளியை நீங்கள் பெறுவீர்கள்? முன்னர் பெற்றதையேவா? அல்வழிச் சந்தி என்பதனை எழுவாய், பயனிலை உறவோடு நிறுத்துவது சரியல்ல. 'எனது கை' என்பதில் இரட்டிப்பு இல்லை. இந்த அல்வழி பற்றி என்ன சொல்வது? உங்கள் கருத்துப்படி இஃது எழுவாய், பயனிலை இயைபு ஆகும்.

**வி. வே.** பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் இதனை நன்கு விளக்கலாம். ஏனெனில் இந்த ஆய்வேடு அவருடைய வழி காட்டுதலில் வெளி வந்தது.

**வி. ஐ. சு.** அவருடைய மாணவர் என்பதற்காக ஒருபோதும் அவருடைய கருத்துகளை அவர் அரண் செய்யமாட்டார்.

**தெ. பொ. மீ.** இது நீண்ட காலத்திற்கு முன்பு செய்யப்பட்ட ஆய்வாகும். ஆகவே, இது குறித்து எனக்கு நினைவில்லை.

**மோ. இ.** 'முருகன் கண்டான்' என்பது எப்போதும் அல்வழியாக இருக்க வேண்டுமென்று கட்டாயமில்லை.

**தெ. பொ. மீ.** நான் மிகவும் பின்னிலையில் இருப்பவன். இங்குள்ள சில அறிஞர்கள் மொழியியலின் புதிய துறைகளையும் பிற வளர்ச்சி நிலைகளையும் மிகுதியும் அறிந்தவர்களாவர். மொழியியலின் விரைவு வளர்ச்சியின் காரணமாக அது குறித்து அவ்வப்

போது உள்ள நிலைகளை அறிந்து கொள்ள இயலாத சூழலில் நான் உள்ளேன். உண்மையில் யாராலும் இயலாது. பழைய நூல்களில் புதிய கருத்துகளைக் கண்டறியும் பழக்கம் சிலரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சில நேரங்களில் இக்கால மொழியியலைக் காட்டிலும் தொல் இலக்கணங்கள் மிகத் தெளிவானவை. மெய்ப்பொருளியலின் செல்வாக்கு மற்றும் இவற்றின் விளைவுகள் ஆகியவற்றைக் கருதலாம். இங்குமங்கும் உள்ள தத்துவ நம்பிக்கைகளை விளக்கலாம்.

**வே. சு.** சப்த பூதக் கோட்பாடு, மீமாம்சிகம், நியாய, வைசேடிகம் மற்றும் வேதாந்தச் சிந்தனைகள் நம் ஆய்வுக்குப் பொருத்தமானவையாகும்.

**வி. கோ.** 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொல்காப்பியச் சுவடி ஒன்றில் 'சிவமயம்' என்னும் தொடர் உள்ளது.

**இரா. கி.** ஆந்திராவில் பெரும் அத்வைதக் கொள்கையினராகப் பாணினி வருணிக்கப்படுகிறார்.

**வி. ஐ. சு.** ஆந்திரப் பகுதியில் பாணினிபால் உள்ள பற்று, அவரைப் பின்பற்றும் போக்கு ஆகியவையும் நம் ஆய்வில் சேர்த்துக் கொள்ளத் தக்கவையாகும்.

**வ. சுப. மா.** இலக்கணக் கொத்தில் சமசுகிருதம் பற்றி ஒரு கருத்து சொல்லப்பட்டுள்ளது. அதாவது தொல்காப்பியம், திருக்கோவையார் முதலியவற்றால் ஐயங்கள் களையப்பெற்றுத் தெளிவு பெறப்படவில்லையானால் சமசுகிருதத்தை ஒருவர் நோக்க வேண்டும்.

**சோம.** 'உரிச்சொல்' என்பதும் 'தாது' என்பதும் ஒன்றுதானா? அப்படி இல்லை என்றால் தெலுங்கில் உரிச்சொல் இல்லை என ஆகும்.

**வ. சுப. மா.** சொல் வகைகளின் பாகுபாடுகள் நான்கு மொழிகளிலும் ஒன்றா? அல்லது வெவ்வேறா?

**வே. சு.** பிற திராவிட மொழிகளில் சமசுகிருதத்தின் நால் வகைப்பட்ட பாகுபாடுகள் பின்பற்றப்பட்டுள்ளனவா? இல்லையா?

**இரா. ச.** சமசுகிருதத்தைப் பின்பற்றி மலையாளத்தில் நால் வகைப் பாகுபாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தெ. பொ. மீ.** இந்தப் பொருள் குறித்து நான் என்ன சொல்ல இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். என் கருத்துகளை முன்னரே அச்சில் வெளியிட்டிருக்கிறேன். முன்னரே

நான் சொல்லிய கருத்துகளை மீண்டும் சொன்னால் நீங்கள் எப்படி நினைப்பீர்களோ? என் கருத்துகளைக் காலத்துக்கேற்றதாகப் புதுக்கிக் கொள்ள எல்லா முயற்சிகளையும் நான் எடுப்பினும் இந்த வயதில் மிகுதியும் மாற்றிக் கொள்வது என்பது இயலாத ஒன்றாக உள்ளது. அறிஞர் குழாம் என்னோடு சேர வேண்டியிருக்கிறது. இது பற்றிய அவர்களது கருத்துகளையும் நான் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

**வி. ஐ. சு.** பின்வருவனவற்றை நான் சொன்னால் இங்குள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். எல்லா நல்ல மாணவர்களையும்போல உங்கள் கருத்துகளை மறு ஆய்வு செய்து புதுக்கிக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்வீர்கள் என்றும் புதிய சிந்தனை மற்றும் புதிய பொருள் இவற்றின் அடிப்படையில் உங்கள் கருத்துகளுக்குப் புதிய வடிவு தருவீர்கள் என்றும் நாங்கள் கருதுகிறோம். மனிதர்களைப்போலக் கருத்துகளும் வளர்கின்றன. இப்போது அல்லது விரைவில் மூன்று பக்குவம் படைத்த அறிஞர்கள் இங்கு வரக்கூடும். காணாதவற்றைக் கண்டறிய ஓர் இன்றியமையாத் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன் கிட்டாத வாய்ப்பு கிட்டியுள்ளது. இவ்வாய்ப்பானது இந்தப் பொருள் பற்றிய ஆய்வுக்கு ஒரு தரத்தை வரையறை செய்கிற ஒரு நூலை வெளிக்கொணரப் பெரிதும் பயன்படும் என நாங்கள் நம்புகிறோம். உங்களுடைய பெருத்த நிலையான பணியின் அடித்தளத்திலேதான் திராவிட மொழியியல் கழகத்தின் இத்தகைய எதிர்காலத் திட்டங்கள் நிற்கின்றன.

**தெ. பொ. மீ.** முதுநிலை ஆய்வாளன் பொறுப்பில் என்னை அமர்த்துவதற்காக என்பால் நீங்கள் அனைவரும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் நன்றி பாராட்டுகிறேன். என்னால் இயன்றதைச் செய்வேன். இவ்வாறே என்னோடு இணைய இருக்கும் நண்பர்களும் செய்வார்கள். பொதுச் சிந்தனையின் துணை விளைவாக இத்திட்டத்தைக் கருதுக. இத்திட்டத்தை இம்முறையில் உணர்ந்து கொண்டு இதன் வெற்றிக்காக உதவுக.

**வ. சுப. மா.** திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த நான்குமொழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ள எல்லாக் கலைச் சொற்களையுங் கொண்ட அடைவு ஒன்றினை நூலினிறுதியில் சேர்க்க.

**ரெட்டி.** கூட்டம் முடியும் தருவாயில் உள்ளது. இங்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் எல்லாம் குறித்துக் கொள்ளப் பட்டுள்ளன. கருத்து வளம் செறிந்ததாக இந்த அரங்கத்தை அமைத்தமைக்கு உங்களனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகா.** திராவிட மொழியியல் கழகத்தின் செயலாளர்கள் சார்பில் இந்த நான்கு அரங்கங்களுக்கும் தலைமை தாங்கிய பேராசிரியர்கள் ஜி. ஜே. சோமயாஜி, வ. சுப. மாணிக்கம், எஸ். வேங்கட சுப்பிரமணிய அய்யர், ஜி. என் ரெட்டி ஆகியோருக்கு நான்கு அரங்கங்களை முறைப்படுத்திச் செம்மையாக நடத்தித் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் எதிர்பாராவகையில் பேராசிரியர் ஆர். சி. ஹிரமத் கலந்துகொள்ள இயலவில்லை. அவர் வந்திருந்தால் தனிப்பட்ட முறையில் உங்களனைவரையும் மைசூர் மாநிலத்தில் தார்வாரில் 1973 ஜூனில் நடைபெற இருக்கும் மூன்றாவது ஆண்டு மாநாட்டிற்கு அழைத்திருப்பார். அவர் சார்பில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உங்களனைவரையும் அழைக்கிறேன்.

**தெ. பொ. மீ.** திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டி அவர்கள் திராவிட மொழியியல் திட்டத்திற்கு மிகவும் ஆதரவாகவும் உதவியாகவும் இருந்து வருகிறார். அவர் இங்கு வர இயலாமைக்கு வருந்தினார். ஆய்வு மையத்திற்கு இட ஒதுக்கீடு செய்தமை, கட்டடம் எழுப்புதற்கு நிலமளித்தமை, முதுநிலை ஆய்வாளர் நிலையைக் கௌரவப் பேராசிரியர் நிலையாக ஆக்கியமை, ஆய்வுக்கு எல்லா வசதிகளையும் அளித்தமை ஆகியவற்றில் அவர் காட்டிய தனி ஆர்வமும் அக்கறையும் செயலாளரால் நன்றி பாராட்டற்குரியதாகும். இக்குழுவின் இந்த உணர்வுகளைக் கடிதம் வழித் தெரிவித்து அவருக்குச் செயலாளர் நன்றி பாராட்ட வேண்டும்.

அரங்கம் 28-10-1972 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு நிறைவுற்றது.

இணைப்பு I

# அறிவுரைக் குழுவின் பரிந்துரைகள்

பின்வரும் நோக்கில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளின் தொல் இலக்கணங்களை முழுமையாக ஆராயலாம்.

1. ஒலியியல் (எழுத்து) உருபனியல் மற்றும் இலக்கணத்தின் ஏனைய பகுதிகளைத் தொன்மைக் காலந் தொடங்கி இக்காலம் வரை ஆராயும் போக்கில் ஆய்வினை அமைத்துக் கொள்ளலாம். ஏற்ற இடங்களில் கவிதை இயலையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

2. பிறமொழி இலக்கணங்கள், உரைகள் மற்றும் எடுத்துக் காட்டுகளை மேற்கோள் காட்டுகையில் கூடியவரையில் திராவிட மொழிகளினின்றும் காட்டுதல் வேண்டும். காட்டாக, லீலா திலக உரையில் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டலாம்.

3. ஒலியியல், இலக்கணம், மற்றும் கவிதை இயல் ஆகியவற்றில் அமைந்துள்ள சொற்கள் இவற்றிற்கான மூலம் திராவிட மொழிகளினின்றும் பெறப்பட்டவையா? அல்லது சமசுகிருதம், பாலியிலிருந்து கடன் பெறப்பட்டவையா? எனச் சுட்டலாம். வேறு மூலங்கள் அறியப்படுமாயின் அவையும் சுட்டப்படலாம்.

4. முரணியம், நிரப்பியம், கட்டிலா மாற்றம், காரகக் கோட்பாடு, பொருள் வகைப்பாடுகள் முதலியவையும் இலக்கணங்களின் நோக்கம், துணைக்கருவிகள் ஆகியவையும் சுட்டப்படலாம்.

5. பிராகிருதம், பாலி, சமசுகிருதத்திலிருந்து கடன்சொற்களை ஏற்கும் பொதுப்போக்கினையும் ஆய்வில் தொடலாம்.

6. நூற்பாக்களில் ஆசிரியர்கள் மற்றும் உரையாசிரியர்கள் ஆண்டுள்ள தத்துவப் போக்குகளைச் சுட்டலாம்.

7. நான்கு திராவிட மொழிகளிலும் சொல்வகைகள், இவற்றின் அடிப்படை அல்லது வரையறை, இவற்றின் வகைப் பாடு, ஒற்றுமை வேற்றுமைகள் ஆகியவற்றைச் சுட்டலாம்.

8. திராவிட மொழிகளுக்குப் புதுமையானதாக உள்ள ஒலிகள் தொடர்பான ஆய்வு முடிவுகள், இலக்கணங்களில் இவ் வொலிகளின் வளர்ச்சி ஆகியவற்றைச் சுட்டலாம்.

9. புறத்தோற்ற ஒப்புமை, இலக்கணங்களின் நோக்கம், மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிவகைகள் (இலக்கியம், பேச்சு) ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

10. இந்தப் பொருளோடு தொடர்புடையதும் எதிர்கால ஆய் வுக்கு உரியதுமான ஆய்வுச் சிக்கல் ஏதுமிருப்பின் அதனையும் காட்டலாம்.

11. தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் கன்னட இலக் கணங்களின் வரலாறு பற்றிய சிறு இணைப்பினை அவ்வவ் விலக் கணங்களில் சொல்லப்பட்டுள்ள பொருளடக்கத்தின் சுருக்கத் தோடு தரலாம்.

12. நான்கு மொழி இலக்கணங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ள இலக்கணக் கலைச் சொற்களைச் சுருங்கிய ஆங்கில வரையறைகளைக் கொண்ட இன்னுமோர் இணைப்பினைப் பொருத்தமான நூலடைவுடன் தரலாம்.

13. ஒரு முதுநிலை ஆய்வாளருக்கும் மேற்பட்டுத் திருப்பதி யிலுள்ள திராவிட மொழியியல் மையத்தில் ஆய்வாளர்கள் இடம் பெறுங்காலத்து அவர்கள் ஒவ்வொரு நாளுங்கூடி அவரவர் மொழிகளிலுள்ள இலக்கணங்களை ஆராயலாம். இதனால் நூற் பாக்களுக்கும் உரைகளுக்கும் புதிய விளக்கங்களும் நல்ல தெளி வும் விளைய வாய்ப்புள்ளது. இயன்ற இடங்களிலெல்லாம் ஐரோப்பிய இலக்கண மரபினையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## இணைப்பு II

### கலந்துரையாடலில் பங்கேற்ற அறிஞர்களின் முகவரி

1. பேராசிரியர் ஜி. ஜே. சோமயாஜி, தலைவர், திராவிட மொழியியல் கழகம், விசாகப்பட்டணம், ஆந்திர மாநிலம்.

2. பேராசிரியர் கே. மகாதேவ சாத்திரி, தெலுங்குப் பேராசிரியர், திராவிட மொழியியல் கழகச் செயலாளர், திருவேங்கடவன் பல்கலைக்கழக மையம், அனந்தப்பூர், ஆந்திர மாநிலம்.

3. பேராசிரியர் ஜி. என். ரெட்டி, பேராசிரியர்—தலைவர், தெலுங்குத் துறை, திருவேஙகடவன் பல்கலைக் கழகம், திருப்பதி, ஆந்திர மாநிலம்.

4. டாக்டர் ஆர். இராதாகிருட்டிணன், தெலுங்கு சாகித்திய அகாதெமி, ஐதராபாத, ஆந்திர மாநிலம்.

5. பேராசிரியர் வ. சுப. மாணிக்கம், பேராசிரியர்—தலைவர், தமிழ்த்துறை, கீழைக் கலைப் புலத்தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், தமிழ்நாடு.

6. டாக்டர் மு. கோவிந்தசாமி, இளநிலைப் பேராசிரியர், தமிழ்த் துறை, அ. ப. க., அண்ணாமலைநகர், தமிழ்நாடு.

7. டாக்டர் மோ. இசரயேல், இளநிலைப் பேராசிரியர், தமிழ்த் துறை, மதுரைப் பல்கலைககழகம், மதுரை, தமிழ்நாடு.

8. திரு எம். விசய வேணுகோபால், விரிவுரையாளர், தமிழ்த் துறை, மதுரைப் பல்கலைககழகம், மதுரை, தமிழ்நாடு.

9. பேராசிரியர் எஸ். வேங்கடசுப்பிரமணிய அய்யர், பேராசிரியர்-தலைவர், சமசுகிருதத் துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா.

10. திருமதி டாக்டர் எம். லீலாவதி, பேராசிரியர், மலையாளத் துறை, மகாராஜா கல்லூரி, எர்ணுகுளம், கேரளா.

11. டாக்டர் பி. இராமச்சந்திரன் பிள்ளை, இளநிலைப் பேராசிரியர், மலையாளத துறை, கேரளப பலகலைக்கழகம, திருவனந்தபுரம், கேரளா.

12. டாக்டர் பி. வேலாயுதம் பிள்ளை, விரிவுரையாளர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா.

13. திரு மா. இளையபெருமாள், தமிழ் விரிவுரையாளர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா.

14. டாக்டர் ஜி. கே. பணிக்கர், மொழியியல் விரிவுரையாளர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா.

15. வி. ஐ. சுப்பிரமணியம், செயலாளர், திராவிட மொழியியல் துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா.

16. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், முதுநிலை ஆய்வாளர், திராவிட மொழியியல் கழகம், திருப்பதி.

17. திரு ஜி. வி. நடராஜன், ஆய்வாளர், திராவிட மொழியியல் கழகம், திருப்பதி.

# அன்பு நூலகம்

10, பார்த்தசாரதிசாமி தெரு
சென்னை 600 005

## வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | இலக்கியச் சுடர் | இ. சுந்தரமூர்த்தி | ரூ. 4-00 |
| 2 | தமிழ் அகராதியியல் | வ. ஜெயதேவன் | 5-00 |
| 3 | தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு | பா. வீரப்பன்<br>கோ. கிருட்டிணமூர்த்தி | 6-00 |
| 4 | திராவிட இலக்கணக் கொள்கை (கலந்துரையாடல்) | பதிப்பாசிரியர்<br>வி. ஐ. சுப்பிரமணியம்<br>தமிழாக்கம்<br>வ. ஜெயதேவன்<br>பா. வீரப்பன் | 3-00 |

